# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. V Issue 6 September 2015

இம்மாதம் மலரில். . .

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் | 2 |
| இம்மாதச் செய்தி | 14 |
| சாவித்ரி | 15 |
| யோக வாழ்க்கை விளக்கம் | 17 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 20 |
| அஜெண்டா | 22 |
| வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள் | 24 |
| தனித்தன்மையும் அதற்குரிய அடையாளங்களும் | 26 |
| நிலையான சமர்ப்பணம் — நெடு நாளைய யோகம் | 30 |
| அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம் | 34 |
| இம்சிக்கும் வம்சி | 38 |
| அன்பர் அனுபவம் | 43 |
| **அன்னை இலக்கியம்** | |
| பார்வைகள் | 45 |

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

**ஜீவியத்தின் ஓசை**

*ஐக்கியமே முடிவான லட்சியம்*

ஸ்ரீ அரவிந்தம்

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஆங்கிலம்: லெஸ்லி ஜேக்கப்ஸ்
தமிழாக்கம்: வித்யா ரங்கன்
திருத்தம்: ஸ்ரீ கர்மயோகி

## XXVIII. Supermind, Mind and the Overmind Maya

Page 282
Para 11

This is a simultaneous development of multitudinous independent Powers.
In this there is yet—or there is as yet—no chaos, no conflict.

There is no fall from Truth or Knowledge.
The Overmind is a creator of truths.
It is not a creator of illusions or falsehoods.
The overmental energism or movement works out the truth.

It works out the truth of the Aspect, Power, Idea, Force, Delight.
It is liberated into independent action.

The consequences of its reality in that independence are worked out.
There is no exclusiveness asserting each as the sole truth of being.
It does not assert the others as inferior truths.

Each God knows all the Gods and their place in existence.



## 28. சத்திய ஜீவியம், மனம், தெய்வீக மனத்தின் மாயை

இது பலதரப்பட்ட சுதந்திரமான சக்திகளின் ஒருங்கமைந்த வளர்ச்சி.
இருப்பினும் அல்லது இதுவரை அங்கு குழப்பமோ, பிணக்கோ இல்லை.
அங்கு சத்தியம் அல்லது ஞானத்தின் வழுவுதல் இல்லை.
தெய்வீக மனம் சத்தியத்தின் சிருஷ்டிகர்த்தா.
அது மாயைகளை அல்லது பொய்ம்மைகளை படைப்பது அல்ல.
தெய்வீக மனத்தின் தத்துவம் அல்லது அதன் இயக்கம் சத்தியத்தைத் திறம்பட திட்டமிடுகிறது.
அது அம்சம், சக்தி, கருத்து, ஆற்றல் மற்றும் ஆனந்தம் இவற்றைச் செயல்படுத்துகிறது.
அது சுதந்திரமான செயல்பாட்டை மேற்கொள்ளும் சுயாதீனம் பெற்றுள்ளது.
அச்சுதந்திரத்தில் அதன் சத்தியத்தின் விளைவுகள் செயல் திட்டம் பெறுகின்றன.
ஒவ்வொன்றும் ஜீவனின் தனித்த சத்தியம் என்பதை வலியுறுத்தும் பிரத்தியேகத்தன்மை அங்கு இல்லை.
அது பிறவற்றை தாழ்ந்த நிலை சத்தியம் என வலியுறுத்துவதில்லை.
ஒவ்வொரு கடவுளும் மற்ற கடவுள்களையும், சிருஷ்டியில் அவற்றின் இடத்தையும் அறியும்.

Each Idea admits all other ideas and their right to be.

Each Force concedes a place to all other forces.

It concedes a place to their truth and consequences.

No delight of separate fulfilled existence denies the delight of other existence.
No delight of separate experience condemns other experience.
The Overmind is a principle of cosmic Truth.
A vast and endless catholicity is its very spirit.
Its energy is an all-dynamism.

It is as well a principle of separate dynamisms.
It is a sort of inferior Supermind.
It is concerned predominantly not with absolutes.

It is concerned with the dynamic potentials or pragmatic truths of Reality.
Or it is concerned with absolutes mainly for their power of generating pragmatic or creative values.

Although, too, its comprehension of things is more global than integral.
Its totality is built up of global wholes.

It is constituted by separate independent realities.



ஒவ்வொன்றும் பிறவற்றின் கருத்தையும் அதன் வாழும் உரிமையையும் ஏற்கிறது.
ஒவ்வொரு சக்தியும் மற்ற சக்திகளின் இடத்தை அங்கீகரிக்கின்றது.
அது பிறவற்றின் சத்தியம் மற்றும் அதன் விளைவுக்கான இடத்தை ஏற்றுக் கொள்கின்றது.
எந்த ஒரு தனித்த பூரணம் பெற்ற ஆனந்த வாழ்வும் பிறவற்றின் ஆனந்த வாழ்வை மறுப்பதில்லை.
தனித்த அனுபவத்தின் எந்த ஆனந்தமும் பிறவற்றின் ஆனந்தத்தைக் கண்டனம் செய்வதில்லை.
தெய்வீக மனம் பிரபஞ்ச சத்தியத்தின் ஒரு தத்துவம்.
ஒரு அகன்ற முடிவற்ற முழு நிறைவு அதன் மனநிலை.
அதன் ஆற்றல் அனைத்து சக்திகளும் ஒருங்கிணைந்த செயல்பாட்டுக்குரியது.
அது தனித்த சக்திக்கான செயல்பாட்டின் தத்துவமும் ஆகும்.
அது ஒரு வகையான தாழ்ந்த சத்திய ஜீவியம்.
அது முழுமைகளுடன் உள்ள தொடர்பை முக்கியமாகக் கொண்டதல்ல.
சக்தி வாய்ந்த திறன்கள் அல்லது நடைமுறைக்கேற்ற உண்மைகளின் சத்தியத்தை முதன்மையாகக் கொண்டது.
அல்லது, நடைமுறை அல்லது ஆக்கபூர்வமான பண்புகளை உருவாக்கும் திறனுக்காக அது முழுமைகளை முதன்மையாகக் கொள்கிறது.
இருப்பினும், அதன் உணர்வாற்றல் ஒருங்கிணைந்தது என்பதைவிட பிரபஞ்சமயமானது.
பிரபஞ்ச முழுமைகளால் அதன் முழு நிறைவு உருவாக்கப்பட்டுள்ளது.
அது தனித்த சுதந்திரமான சத்தியங்களை உள்ளடக்கியது.

They unite or coalesce together.
The essential unity is grasped by it.

It is felt to be basic of things and pervasive in their manifestation.

But this unity is no longer, as in the Supermind, their intimate and ever-present secret.

It is no longer their dominating continent.

It is no longer the overt builder of the harmonic whole of their activity and nature.

Page 283
Para 12

Our mental consciousness is separative and only imperfectly synthetic.
We want to understand the difference between it and this global Overmind Consciousness.
We may come near to it if we compare the different views of activities.

One is strictly mental and the other an overmental view.

To the Overmind, all religions would be true.
They would be true as developments of the one eternal religion.



அவை ஒருங்கிணைந்து அல்லது ஒன்று சேர்ந்துள்ளன.
அவற்றின் அடிப்படையான ஐக்கியம் அதனால் கிரகிக்கப்பட்டுள்ளது.
அது பொருட்களின் அடிப்படையாகவும், அவற்றின் வெளிப்பாட்டில் எங்கும் வியாபித்துள்ளது என்றும் உணரப்படுகிறது.
ஆனால் இந்த ஐக்கியம் சத்திய ஜீவியத்திலுள்ளது போல் அதனுள் நெருக்கமாக அழியாது உறையும் இரகசியமாக இனி இல்லை.
அது அவைகளின் முதன்மையான பகுதியாக இனியும் இல்லை.
அது அவற்றின் நடவடிக்கை மற்றும் குணம் இவற்றின் சுமுகமான முழுமையின் வெளிப்படையான அமைப்பை எழுப்புவதாக இனி இல்லை.

நம் மனத்தின் ஜீவியம் பிரிந்த மற்றும் முழுமையற்ற கூட்டிணைப்பாகும்.
இதற்கும் பிரபஞ்ச தெய்வீக மனத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை நாம் புரிந்து கொள்ள விரும்புகிறோம்.
தெய்வீக மனத்தின் செயல்பாட்டின் பல்வேறு கோணங்களை நம் மனத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இதை நாம் ஓரளவு அறியலாம்.
ஒன்று முற்றிலும் மனத்தைச் சேர்ந்தது, மற்றது தெய்வீக மனத்தின் பார்வைக்குரியது.
தெய்வீக மனத்திற்கு எல்லா மதங்களும் உண்மையானவை.
அவை ஒரு சாசுவதமான மதத்தை முடிவாக எழுப்பும் அளவிற்கு உண்மையானவை.

All philosophies would be valid.
Each would be valid in its own field.

It would be valid as a statement of its own universe-view.

All political theories with their practice would be legitimate.

They would be the working out of an Idea Force.
That Idea would have its right to application.
It would have its right to practical development in Nature's play of energies.
In our separative consciousness, these things exist as opposites.
They are imperfectly visited by glimpses of catholicity and universality.
Each claims to be the truth.
Each taxes the others with error and falsehood.

Each feels impelled to refute or destroy the others.

It does so in order that itself alone may be the Truth and live.
At best, each must claim to be superior.

Each admits all others only as inferior truth-expressions.

An overmental Intelligence would refuse to entertain this conception.



எல்லாத் தத்துவங்களும் ஏற்கத்தக்கவை.
ஒவ்வொன்றும் அதனதன் துறையில் ஏற்றுக் கொள்ளக் கூடிய தகுதியுடையவை.
அதனதன் சொந்தப் பிரபஞ்சப் பார்வையின் விவரமாக அவை ஏற்கத் தக்கவை.
எல்லா ஆட்சி முறைகளின் தத்துவங்களும் அவைகளின் பயிற்சிகளும் முறையானவை.
அவை கருத்தாற்றலைத் திட்டமிடுவதாகும்.
அக்கருத்து செயலாக உருவெடுக்கும் உரிமை பெற்றிருக்கும்.
அவை இயற்சக்தியின் லீலையில் நடைமுறையாக வளர்ச்சியுறும் உரிமையைப் பெற்றிருக்கும்.
நம் பிரிந்த ஜீவியத்தில் இவை எதிர்மறையாக உள்ளன.

அவை க்ஷண நேரம் பரந்த மனப்பாங்கு மற்றும் பிரபஞ்சத்-தன்மையால் பூரணமற்ற நிலையில் தீண்டப் பெறுகின்றன.
ஒவ்வொன்றும் தங்களை சத்தியம் என்று வலியுறுத்துகின்றன.
ஒவ்வொன்றும் பிறவற்றை தவறு என்றும் தீமை என்றும் வற்புறுத்துகின்றன.
பிறவற்றை மறுக்கவும் அழிக்கவும் தூண்டுதலைக் கொண்டுள்ளன.
அது தான் மட்டுமே சத்தியம் மற்றும் ஜீவனுள்ளது என்பதாக அதைச் செய்கிறது.
ஒவ்வொன்றும் தானே ஒப்புயர்வற்றது என்ற உரிமையைக் கோருவது இதில் சிறப்பானது.
ஒவ்வொன்றும் தன்னை விட்டு, பிறவற்றைத் தாழ்ந்த சத்திய வெளிப்பாடாக மட்டுமே ஏற்கிறது.
தெய்வீக மனத்தின் அறிவு இக்கருத்தை ஏற்க மறுக்கும்.

It would refuse this drift to exclusiveness.
It would allow all to live as necessary to the whole.

It would put each in its place in the whole.

Or it would assign to each its field of realisation or of endeavour.
This is because in us consciousness has come down completely.
It has come down into the divisions of the Ignorance.

Truth is no longer either an Infinite or a cosmic whole.

It no longer has many possible formulations.
It has a rigid affirmation holding any other affirmation to be false.
It holds them false because different from itself.

It holds them to be false because entrenched in other limits.
Our mental consciousness can approach towards a total comprehensiveness.
It can approach a catholicity.
But to organize that in action and life seems to be beyond its power.
The individual or collective evolutionary Mind throws up a multiplicity of divergent view-points.



இத்தகைய பிரத்தியேகமான பிரிவினையை அது நிராகரிக்கும்.
அது அனைத்தும் முழுமையில் இணைந்து வாழ அனுமதிக்கும்.
முழுமையில் ஒவ்வொன்றிற்கும் அதன் இடத்தைப் பெற்றுத் தரும்.
அல்லது ஒவ்வொன்றிற்கும் அது சித்திக்கக்கூடிய களம் அல்லது முயற்சிக்குரிய இடத்தை அளிக்கும்.
இது ஏனெனில் ஜீவியம் முழுமையாக நம்மில் தாழ்ந்துள்ளது.

அது கீழிறங்கி அறியாமையின் பிரிவினையை அடைந்து விட்டது.
அங்கு சத்தியம் அனந்தமாகவோ அல்லது பிரபஞ்சத்தின் முழுமையைக் கொண்டதாகவோ இல்லை.
பல சாத்தியங்களை உள்ளடக்கிய உருவகம் அதில் இல்லை.
அது மற்றதன் உறுதிப்பாட்டைப் பொய்யென வலியுறுத்தும் திடமான உறுதியுடையது.
தன்னிலிருந்து வேறுபட்ட ஒன்றாக அவையிருப்பதால் அவற்றைப் பொய்யாக அறிகிறது.
பிற வரையறைகளில் புதைந்துள்ளதால் அவற்றைப் பொய்யாகக் கொண்டுள்ளது.
நம் மனத்தின் ஜீவியம் பூரண முழுமையை நாட முடியும்.

அது பரந்த மனப்பாங்கை நெருங்க முடியும்.
ஆனால் அதைச் செயலில் மற்றும் வாழ்வில் செயல்படுத்துவது அதன் சக்திக்கு அப்பாற்பட்டது.
தனிப்பட்ட அல்லது கூட்டான பரிணாமத்திற்குரிய மனம் பல்வகைப்பட்ட வெவ்வேறான பார்வைக் கோணங்களை ஏற்படுத்தும்.

It throws up divergent lines of action.
It lets them work themselves out side by side.
Or it lets them work in collision or in a certain intermixture.

It can make selective harmonies.
But it cannot arrive at the harmonic control of a true totality.
Cosmic Mind must have such a harmony even in the evolutionary Ignorance.
It must have a harmony, if only of arranged accords and discords.
There is too in it an underlying dynamism of oneness.
But it carries the completeness of these things in its depths.

Perhaps it carries them in a supermind-overmind substratum.
But it does not impart it to individual Mind in the evolution.

It does not bring it or has not yet brought it from the depths to the surface.
An Overmind world would be a world of harmony.
We live in the world of Ignorance.
It is a world of disharmony and struggle.

Contd...

**ஜீவிய மணி**

*நேரம் வந்தால் வாழ்வு உடனே செயல்படும்.*



வேறுபட்ட செயல்பாடுகளை அது வெளிப்படுத்தும்.
அவை தாமே ஒன்றாகச் சேர்ந்து செயல்பட அனுமதிக்கும்.
அவை சேர்ந்து அல்லது ஒரு வகையான இணைந்து கலந்த முறையில் அது அவைகளைச் செயல்படச் செய்யும்.
அது தேர்ந்தெடுக்கப்பட்ட சுமுகங்களை ஏற்படுத்த முடியும்.
ஆனால் அது உண்மையான முழுமையின் சுமுகமான பிணைப்பை அடைய முடியாது.
பரிணாமத்தால் எழும் அறியாமையிலும் பிரபஞ்ச மனத்திற்கு அந்தச் சுமுகம் இருக்கும்.
ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை ஒழுங்குபடுத்தும் சுமுகமாக அது இருக்கும்.
ஒருமைக்கான அடிப்படை சக்தியும் அதில் உண்டு.
இவ்விஷயங்களின் பூரணத்துவத்தை அது தன் ஆழத்தில் கொண்டுள்ளது.
இப்பூரணத்துவத்தை அது சத்தியஜீவியம்-தெய்வீக மனம் இவை உறையும் அடித்தளத்தில் கொண்டிருக்கலாம்.
ஆனால் பரிணாமத்தில் தனிப்பட்ட மனத்திற்கு அதை அறிவிப்பதில்லை.
அதை ஆழத்திலிருந்து மேல் மனத்திற்கு அது கொண்டு வருவதில்லை அல்லது இன்னும் கொண்டுவரவில்லை.
தெய்வீக மனத்தின் உலகம் சுமுகத்தின் உலகமாக இருக்கும்.
நாம் அறியாமையின் உலகில் வாழ்கிறோம்.
அது பிணக்கு மற்றும் போராட்டம் நிறைந்த உலகம்.

தொடரும்...

**ஜீவிய மணி**

*நெஞ்சு நிறைந்தால் நேரம் வரும்.*

## இம்மாதச் செய்தி

# உள்ளதை உணர்ந்து ரசித்தால் உழைப்பு செல்வமாகும்.





**Page 176: Leaped out from a chance tension of the soul**

*ஆத்மாவின் துடிப்பான படபடப்பு துள்ளியெழும் வாய்ப்பு*

✡ பிரம்ம வண்ணம் வாழ்வை அலங்கரிக்கும்

✡ ஞானத்தின் பெருமையும், ஆத்ம ஞான திருஷ்டியும்

✡ அன்பின் இதயம் ஆர்வத்தின் வேகத்தால் தீவிரம் பெற்று

✡ உடலின் உருவமற்ற இரகஸ்யத்தின் உத்தம குரு

✡ கண்காணாத ஆத்மப் போர்வையுள் அடைக்கலம் புகுந்து

✡ உணர்வை அதன் எல்லையை மீறும்படி நிர்ப்பந்திக்கும் மனஉறுதி

✡ புலனுக்குப் புலப்படாத ஒளியும், சந்தோஷமும்

✡ சொல்லொணா அமைதியுள் அடியெடுத்து வைத்தன

✡ மூடியிட்ட ஆசையின் இனிமையை அரைகுறையாக ஆட்கொண்டது

✡ புதிரான ஆனந்த நெஞ்சம் புகலிடம் தேடியது

✡ திரையிட்ட சத்தியம் சிருஷ்டிக்குப் பகுதியாக உட்பட்டது

✡ ரூபலோகத்தின் உண்மையுணர்வை கடைக்கண்ணால் கண்டது

✡ எண்ணம் திருஷ்டியாகி ஒளி பெருகியது

✡ இதய ஞானம் தழலாய் எழுந்து தாங்கிப் பிடித்தது

✡ ஆன்மாவின் விழிப்பான ஆகாயத்துள் பிடிபட்டது

✡ பிரபஞ்ச பிரம்மம் சின்னமாகச் சிறந்தது

✡ இந்த லோகம் பெருநம்பிக்கையை நம்முள் எழுப்புகிறது

✡ அதன் சக்திகள் வானிலிருந்து புவியில் இறங்கி வந்தன

✡ அதன் அடையாளம் நம் வாழ்வின்மீது தம் முத்திரையைப் பதித்தன
✡ நம் தலைவிதிக்கு அவை ராஜ நடையைத் தருகின்றன
✡ வாழ்வின் பெரு அலைகளுக்கு அதன் தவறான அசைவுகள் ஆதரவு தருகின்றன
✡ நாம் தேடுவன அனைத்தும் அங்கு முன்கூட்டி அமைந்துள்ளன
✡ நாமறியாதவை, நாம் தேடாதவை அனைத்தும்
✡ மனித இதயம் உரிமையாகப் பெற்றவை
✡ காலத்தைக் கடந்தவன் காலத்தில் தன்னைப் பூர்த்தி செய்து கொள்கிறான்
✡ நாள் எனும் புதிருள் நலமாகக் கரைந்துறையும்
✡ திறந்த அனந்தனின் பிரம்மத்தின் காலம்
✡ முடிவற்ற வாய்ப்பு மலைமுடியையெட்டும்
✡ படியில்லாத ஏணியின் கனவு முயன்று மலையேறுகிறது
✡ ஜீவனின் விழிப்பான சமாதியில் என்றென்றும்
✡ அவ்வேணியில் ஏறுபவரெல்லாம் தெரியாத இலக்கை நாடுகின்றனர்
✡ நிரந்தரமான நிலையற்ற சக்தி முயன்று
✡ திரும்பும் நிலையற்ற யாத்திரை
✡ அப்பாலை நாடும் இயற்கையின் புனித யாத்திரை

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

எவ்வழி எச்சக்திகளால் ஜீவியம் பரமாத்மாவாயிற்று என அறிவது **Supreme Discovery** மாபெரும் வெற்றி என பகவான் குறிப்பிடுவது.



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/23. ஜீவாத்மா தன்னை பரமாத்மாவின் அம்சமாக அறிவது ஐக்கியம்

- ஒரு மனிதனுடைய ஆத்மா வழக்கில் ஜீவாத்மா எனப்படும்.
- ஆத்மா, மனம், உயிர், உடல் சேர்ந்தது ஜீவன் (**embodied being**).
- *அந்த ஜீவனின் ஆத்மா ஜீவாத்மா.*
- மரபு ஜீவாத்ம சித்தி பெற்றவனை ஜீவன் முக்தன் என்றும், அவனுக்கு அடுத்தகட்ட முக்தி பரமாத்ம முக்தி எனவும் கூறுகிறது.
- *இம்முக்தியால் ஜீவாத்மா பரமாத்மாவில் கரைகிறது எனக் கூறுகிறது.*
- உலகில் பல லட்சம், பல கோடி ஜீவாத்மாக்கள் உள்ளன என்பது மரபு.
- இது சாங்கியம். ஒரு பிரகிருதி, பல புருஷர்கள்.
- *பகவான் உலகில் உள்ளது ஒரே ஜீவாத்மா எனவும், மனம் அதை பிரித்துப் பலவாகக் காண்கிறது எனவும் கூறுகிறார்.*
- ஜீவாத்மா சிருஷ்டியுள் இன்று வரை ஜனிக்கவில்லை எனவும் கூறுகிறார்.
- ஞானத்தின் நான்கு வகைகளில் ஐக்கியம் முடிவானது.
- ஞானம் பிரம்மத்துடன் ஞானத்தால் ஐக்கியமாவது ஞான யோக மோட்சம்.
- மோட்சம் அது போல் பகுதியானது, பிராணனும், உடலும் அடுத்த பகுதிகள்.
- ஜீவாத்மாவின் பகுதிகள் மூன்று, மனோமய புருஷன், பிராணமய புருஷன், அன்னமய புருஷன்.
- *சைத்திய புருஷன் முழுமையானது, இவற்றிலிருந்து வேறுபட்டது.*

- சைத்திய புருஷன் முழுமையானதானாலும், மனிதன் விருப்பப்பட்டால் பகுதியான மோட்சந்தரும்.
- மோட்சம் பகுதி, முழுமை திருவுருமாற்றம்.
- *பகுதியால் முழுமையைத் தர முடியாது. முழுமையால் பகுதியான மோட்சம் தர முடியும்.*
- ஞான யோகத்திற்கும் பூரண யோகத்திற்கும் உள்ள வித்தியாசம் மனத்திற்கும் சைத்திய புருஷனுக்கும் உள்ள வித்தியாசம்.
- ஞான யோக மையம் மேல் மனம்.
- *பூரண யோக மையம் அடி மனம்.*
- அடி மனம் பிரபஞ்சம் முழுவதும் பரவியுள்ளது.
- மேல் மனம் செய்யும் யோகம் இருளை விலக்குகிறது.
- இருள் பிரம்மாண்டமான சக்தி.
- பரமாத்மாவை தூங்கும் ஆத்மா (**Sleep Self**) என உபநிஷதம் கூறுகிறது.
- பாதாளத்தைக் கனவின் ஆத்மா (**Dream Self**) எனவும் கூறுகிறது.
- மேல் மனத்தில் இவை சந்திக்க முடியாது.
- அடி மனத்தில் சந்திக்கலாம்.
- பாதாளம், ஜட இருள் பரிணாமத்தால் வளர்ந்தது.
- பாதாளமும் பரமாத்மாவும் அடி மனத்தில் சந்திப்பது *இருளை ஒளி திருவுருமாற்றுவது.*
- ஹட யோகம், கர்மயோகம், ஞான யோகம், ராஜ யோகம், தந்திர யோகங்கள் போன்றவை அனைத்தும் மேல் மனத்தில் அகந்தையின் யோக சாதனை.
- பூரண யோகம் ஜீவாத்மா பரிணாமத்தால் பரமாத்மாவாகிறது என்கிறது.
- பரமாத்மாவை பகவான் ஒளிமயமான அஞ்ஞானம் என்கிறார்.
- தெய்வீக மனத்தைக் கடக்கும்வரை அஞ்ஞானம் தொடரும்.
- அஞ்ஞானம் தொடரும்வரை திருவுருமாற்றமில்லை.
- சத்திய ஜீவியத்துள் அஞ்ஞானமில்லை.



- சத்திய ஜீவியம் மூன்றாகப் பிரிகிறது.
- பரமாத்மா தூங்கும் ஆத்மாவானால், பரமாத்மாவை அடைவது மோட்சமானால் மோட்சம் பெரிய ஆன்மிக உறக்கமாகும்.
- பரமாத்ம மோட்சம் முடிவான மோட்சமில்லை.
- அதைக் கடந்த பிரம்மத்துள் மோட்சம் பெறும் நிலைகள் மூன்று.
- *நிர்விகல்ப சமாதியும் தூக்கத்துள் உறைவதாகும்.*
- அஞ்ஞானம் அழியும் கட்டங்கள்
    1. பாதாளமும், பரமாத்மாவும் இணைவது.
    2. முனிவர் மனத்திற்கு மௌனத்தால் உயர்வது. சிந்தனைக்குரிய அஞ்ஞானம் அழியும்.
    3. ரிஷி மனம் சென்று சொல்லழிந்து சொல்லால் ஏற்படும் அஞ்ஞானம் அழிவது.
    4. யோகி, தெய்வ நிலைகளின் நேரடி ஞானம், ஞானம் அனுமதிக்கும் அஞ்ஞானம் அழிவது.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சிருஷ்டி என்பது பிரபஞ்சம். அதன் மையம் மனிதன். பிரம்மம் சிருஷ்டியைக் கடந்தது. மனிதன் ஆன்மிக முழுமை பெறும்பொழுது இந்த மூன்று அம்சங்களை அடைகிறான். தேர்தலில் தனி மனிதன் ஓட்டுப் போட வேண்டும் என்பது போல் மனிதன் மூலமே இறைவன் [உலகில்] பிரபஞ்சத்தில் செயல்பட முடியும். இறைவனையும் உலகையும் பிரித்தது மனம். எல்லாப் பிரச்சனைகளும் அதன் மூலம் வந்தவையே. இவற்றைச் சேர்க்கும் கடமையை இறைவன் மனிதனுக்கு அளித்துள்ளான். பாதாளத்தையும் பரமாத்மாவையும் இணைத்து மனிதன் தன் கடமையைப் பூர்த்தி செய்கிறான். சிருஷ்டிக்கு மனிதன் முக்கியம். அதனால் அவன் அஞ்ஞானத்திலிருந்து விடுபடுவது அவசியம்.

## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 116. எந்தச் சிந்தனையுமின்றி...

- எந்தச் சிந்தனையுமின்றி எதை ஒருவர் செய்தாலும் *அது அற்புதமாக மாறும்.*
- அற்புதம் ஆச்சரியப்படும் பலனைத் தரும்.
- பலன் பெற்றவர் பலனைக் கருதினால் அவர் வாழ்வுக்கு உரியவர்.
- அவர் வாழ்வு அபரிமிதமாகும்.
- பலனைக் கருதாமல், நடந்ததைக் கருதினால் ஆத்மா மலரும்.
- மலரும் ஆத்மா சொர்க்க வாயில்.
- *மலர்ந்த ஆத்மா வாழ்வில் மலர்வது, வாழ்வின் ஆத்மாவாக மலர்வது பூரணயோக வாயில் நிலையாகத் திறப்பதாகும்.*
- எழுவதை எல்லாம் பெற்றால், ஜீவன் இருகூறாகப் பிளந்து உள்ளங்கால் வரை செல்வது தெரியும். நிமிர்ந்தால் பிளவு தலைக்கு மேலும் போகும்.
- பெற்றது கை நழுவி கீழே விழாவிட்டால் உயர்ந்தது உச்சிக்கு மேலுள்ள சக்கரத்தைத் திறக்கும். *அது சகஸ்ரதளத்தின் கீழுள்ளது.*
- சிந்தனை மையம் உயர்ந்து அங்குச் செல்வது தெரியும்.
- நிலைமை ஜீவனின் நிதானமானால் விழிப்புற்ற சிந்தனை மையம் தலைக்கு மேலேயே நின்றுவிடும்.
- ஷேக்ஸ்பியர் அங்கிருந்து எழுதினார்.
- வேத ரிஷிகள் சகஸ்ரதளத்தைக் கடந்து சென்று எழுதினர்.
- மின்னல் வேகத்தில் பெற்ற பலன் மின்னலாக மறையும்.



- ஜீவனைப் போல் உடலும், உடலைப் போல் உள்ளமும், எந்த உணர்வுமின்றி இருந்தால் வந்த அனுபவம் *ஆத்ம சித்தியாகும்.*
- கவிஞனாகும் சித்தியிது.
- காவிய சுவையிருந்தால் அன்பன் காவியமாகப் பெருகுவார்.
- பலனைக் கருதாதது போல் காவியத்தையும் பொருட்படுத்தாவிட்டால் பெற்றது உத்தமமாகும்.
- உத்தமன் யோகம் செய்யும் சாதகன்.
- ஒரு மணி நேரமாவது என்னைப் பிரதமராக்குங்கள் எனக் கேட்டவரை எவரும் ஏற்கவில்லை.
- அவர் நம்பர் 2 ஆனார்.
- 30 ஆண்டுகள் 2-ஆம் நம்பரானார்.
- *முடிவில் ஜனாதிபதியானார்.*
- கேட்காவிட்டால் கிடைக்கும். அவர் கேட்டார், இழந்தார்.
- கேட்காமலிருப்பது எந்த சிந்தனையுமில்லாத ஆத்மாவின் குரல்.
- கேட்க முடியாத நிலை அதையும் கடந்தது.
- அது Mrs. கார்டினருடையது.
- Mrs. கார்டினர் கேட்காததால் எலிசபெத் பெம்பர்லியைப் பெற்றார்.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

இமயமலையில் ஒரு தவசி செய்த தவத்தின் பலனாக பிரெஞ்சுப் புரட்சி எழுந்தது என்று பகவான் கூறுகிறார். தவம் வலிமையுடையது. தவம் இங்குப் பலித்து அங்கு எழுந்தது புரட்சி. ஆன்மிகத்தை அறியாதவர் ஏற்க முடியாத கூற்று இது.

## அஜெண்டா

**மனம் வளரும் நிலைகள் - குதர்க்கம்.**

Volume 2, page 23

- மனம் உடலிலும், உயிரிலும் மனத்திலும் உண்டு.
- மனத்தில் உள்ள மனத்திற்கு சிந்தனை செய்யும் மனம் எனப் பெயர்.
- மனம் ஒன்றை ஏற்றால், உடனே அதை மறுக்கும்.
- காலேஜில் சேர விரும்பும் மாணவன், சேரக்கூடாது என நினைப்பான்.
- *மனம் பகுதி. பகுதி ஏற்பது ஒரு பகுதி.*
- ஒரு பகுதியை ஏற்றால், அடுத்த பகுதி மறுக்கும்.
- இதுவே சிந்தனை பிறக்கும் நிலை.
- நாம் பேசும்பொழுது குறுக்கே பேசுபவர் பண்பற்றவர்.
- அவரே பேசக்கூடாது என நினைத்தாலும், அவரை மீறிப் பேச்செழும்.
- *அவர் சிந்திக்க ஆரம்பித்து விட்டார். சிந்தனை அவர் கட்டுப்பாட்டிலில்லை எனப் பொருள்.*
- சிறிய மனிதனுக்குப் பெரிய வாய்ப்பு எழுவது குதர்க்கம் எழ வழி செய்யும்.
- சிறியது சிறியதை ஏற்றால் நிம்மதியாக இருக்கும்.
- சிறியது பெரியதை ஏற்றால் ஆழ்ந்து உள்ளே பெரிய பாகம் எதிர்க்கும்.
- முனிசிபல் கௌன்சிலராகவும் நிற்க முடியாத எளிய மனிதனுக்கு 60-ஆம் வயதில் முனிசிபல் சேர்மன் பதவி வருவதைக் கண்ட அன்பர் அவசரப்பட்டு அவரிடம் கூறினார்.
- *அவருடைய குதர்க்கம் எழுந்தது.*
- தரையில் உட்கார்ந்திருந்தவர் வெறிபிடித்தவர் போல எழுந்தார். துண்டை உதறினார். ‘என்னை வெறியேற்று-கிறீர்களா?’ எனக் கேட்டார்.



- கேட்டவர் நல்லவர். ஆன்மிக அறிவில்லாதவர்.
- நல்லவர் என்பதால் அவர் குதர்க்கம் வாய்ப்பை அழிக்கவில்லை.
- அவர் குதர்க்கம் சேர்மன் வாய்ப்பை மெம்பராக மாற்றியது.
- எளிய எதிரானது சிக்கலான இருளாகிறது என்று **BOOK** கூறுகிறது.
- 1956-இல் சத்திய ஜீவியம் வந்தபொழுது புவியின் தமஸ் எழுந்து அதை விழுங்கியது.
- மனிதர்கள் வாழ்வு தரக்கூடிய வாய்ப்பை அறியும் அறிவு பெற்றவரிலர்.
- அவர்களால் ஆன்மிக வாய்ப்பைப் பெற முடியாது.
- ஏதோ ஆபத்து என நினைப்பார்கள்.
- ரிச்சர்ட் போல ஓலமிடுவார்கள்.
- ரிச்சர்ட் தீய சக்தி. உலகப் போரை ஆரம்பித்தவர். அவரும் மௌனம் பெற்று திருவுருமாறலாம் என்பதை அவரிடம் கூற முடியாது.
- தீய சக்தியானாலும் ரிச்சர்ட் அன்னையின் கணவர்.
- அன்பர் எதையும் பெறலாம்.
- அவர் எதையும் ஏற்க மாட்டார்.
- குதர்க்கம் இயல்பாக எழும்.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பகவான் ஸ்ரீ அரவிந்தரின் பூரண யோகம் துறவறத்தை ஏற்கவில்லை, மோட்சத்தை நாடவில்லை. திருவுருமாற்றத்தையும், சத்திய ஜீவியத்தையும் நாடுகிறது. வாழ்வனைத்தும் யோகம் என்கிறது. வாழ்வின் வளம் சத்திய ஜீவியத்திற்கு அடிப்படை என்கிறது. உடல் நலம், செல்வம், அரசியல், அதிகாரம், சத்திய ஜீவியம் வர உதவும் அடிப்படை என்கிறார். அதனால் அன்பர்கள் பணத்தை விலக்காமல் பெற முயல வேண்டும்.

# வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

10. வெளித்தோற்றத்தைக் கருதாமல் உள்ளுறை சாரத்தைக் கருத வேண்டும். போலியான தோற்றத்தைக் கண்டு ஏமாறக் கூடாது. தோற்றம் சரியில்லை என்றாலும் உள்ளுறை விஷயம் உண்மையாக இருந்தால் நாம் அதை ஆதரிக்கத் தயங்கக் கூடாது.

விக்காம் பெற்றது வெளித் தோற்றம். டார்சிக்குரியது உள்ளுறை சாரமான விஷயம்.

- கோபமாகப் பேசும் நண்பன் கோபப்படுகிறான் என அறிவது வெளித் தோற்றம். இந்த நேரம் நண்பன் அதிக தீவிர நட்பால் நெருங்கி வர விரும்பி அதற்குரிய பண்பில்லாமல் தீவிரத்தை நெருக்கமான இதமாகத் தெரிவிக்க முடியாமல் கோபமாக வெளிப்படுத்துகிறான் என அறியும் விவேகம் - **(a more deliberate View P.2, The Life Divine)** - பரந்த நோக்கம், நிதானம், பொறுமை, இதம், இங்கிதம், பதம், பக்குவம், பவித்திரம் உள்ளவரைக் காண்பதரிது. அரிதானாலும் காணலாம். காணும் பக்குவம் நமக்கு வந்தவுடன் கண்ணில் படும்.

  கண்ணில் படாதது அது இல்லாததாலில்லை, காணும் பக்குவம் இனியும் வராததால் என அறிகிறோம்.

- தோற்றம் பொதுவாகப் பணிவாக அமையும். பணிவான மௌனத்தை மேலேயுள்ளவர் பக்குவமான நடத்தையென எடுத்துக் கொள்வர். முதலாளி பணத்தில் குறியில்லாதவர் எனக் கண்டு அவரிடம் அளவு கடந்து பணிந்து அவருக்கு ருசியான விஷயங்களில் பங்கு கொண்டு, இதமாகப் பழகிய கணக்குப்பிள்ளை ஊறறிய 10 ஆண்டுகள் கொள்ளையடித்தான். முதலாளி இல்லாத நேரம் வண்டி வைத்து மகசூலை எடுத்துப் போனான்.
  வெளித் தோற்றம் - இதம் இங்கிதம்.
  உள்ளுறை சாரம் - கொள்ளையடிப்பது.



- செட்டி நாட்டு ராஜா 200 ஏக்கரில் 64 அறைகள் கொண்ட அரண்மனையை 1930-இல் கட்டினார். அவரைப்போல் இரு மடங்கு சொத்துள்ள மற்றொரு செட்டியார் ஒரு சிறுவீட்டில் குடியிருந்து ஒரு பாங்கையும் இன்ஷூரன்ஸ் கம்பெனியையும் ஸ்தாபித்தார். இவர் பிள்ளைகள் பெரும் தொழிலதிபர்களானார்கள்.

  ராஜாவின் பிள்ளைகள் ‘நாங்கள் எதையும் சம்பாதிக்கவில்லை. தகப்பனார் சம்பாதித்ததைக் காப்பாற்றி வருகிறோம்' என்றனர்.

- ‘மூர்த்தி பெரியதா, கீர்த்தி பெரியதா' என்பது சொல். ‘செட்டியார் முடுக்கா, சரக்கு முடுக்கா' என்பது மற்றொரு வாக்கு. ‘சிறுகக் கட்டிப் பெருக வாழ்' எனப் பழமொழி உண்டு.

- சிவந்த அழகுள்ள பெண் சிடுமூஞ்சி. நிறமில்லாமல் அழகுமில்லாத பெண் அமிர்தமான குணம் படைத்தவள். அழகியை உடனே மணந்து அவலப்படுவது உலகம். அமிர்தமான குணம் கல்யாண மார்க்கெட்டில் இரண்டாம் தாரமாகப் போகும். ஹோட்டலில் பழக்கமான சர்வரிடம் பாதாம் அல்வா கொடு என்றால் அவன் சுடச்சுட கோதுமை அல்வா கொண்டு வந்தான். நான் ஸ்டாலில் பாதாம் அல்வாவைப் பார்த்துத்தானே கேட்டேன் என்ற வாடிக்கைக்காரரை பிரியமாகப் பார்த்து, இனிமையாகச் சிரித்து அது போன வார சரக்கு. இது இப்பொழுது தயாரானது என்றான்.

(தொடரும்)

## ஜீவிய மணி

*அன்னை மயமான வாழ்வு அன்பு மயமான வாழ்வு. அற்புதம் நிறைந்த அகவாழ்வு. அதிசயம் தன் ஆச்சர்யத்தை இழந்த மனித வாழ்வு. மனிதனை மற்றவர் மகோன்னதப் பிறவியாகப் போற்றும் மக்கள் மனநிலையைக் காணும் நேரம் மனித வாழ்வு அன்னை வாழ்வாகிறது.*

# தனித்தன்மையும் அதற்குரிய அடையாளங்களும்

மூலம்: ஸ்ரீ கர்மயோகி

விரிவாக்கம் & சொற்பொழிவு ஆற்றியவர்: திரு. N. அசோகன்

சொற்பொழிவு ஆற்றிய தேதி: 24.04.2015

இப்பொழுது நான் பேச எடுத்துக்கொண்டுள்ள தலைப்பு தனித்தன்மையும், அதற்கு அடையாளமாக விளங்கும் குணவிசேஷங்களும் ஆகும். குணவிசேஷங்களைப் பற்றி விவரமாகப் பார்ப்பதற்குமுன் தனித்தன்மை என்றால் என்ன? மனித சமூகத்தில் அது எப்படியெல்லாம் வெளிப்படுகிறது என்ற பொதுவான விவரங்களைப் பார்ப்போம். தனித்தன்மை என்றால் தனித்திருத்தல் அல்லது தனியாகத் தெரிதல் என்று நாம் விளக்கம் கொடுக்கலாம். அப்படித் தனியாகத் தெரிய வேண்டும் என்றால், அந்தளவிற்கு அவர் வேறுபட்டு நிற்கிறார். அதனால்தான் தனியாகத் தெரிகிறார் என்று அர்த்தமாகிறது. உதாரணமாக நம் ஊரில் எல்லோரும் சுமாரான வசதியோடு இருக்கும்போது ஒருவர் மட்டும் பெரும் பணக்காரராக இருந்தால், அவருடைய வீடு, அவர் வைத்திருக்கும் கார் எல்லாம் அவரைத் தனித்துக் காட்டும். அம்மாதிரியே ஒரு வகுப்பில் மாணவர்கள் எல்லோரும் சராசரியான அறிவு பெற்றிருக்கும்போது ஒருவன் மட்டும் அபார புத்திசாலியாக இருந்தால், அந்த அபார அறிவு அந்த மாணவனைத் தனித்துக் காட்டும். ஆகவே தனித்தன்மை என்பதை நாம் வேறுபாடு, வித்தியாசம் என்றும் அர்த்தம் செய்து கொள்ளலாம்.

இறைவனே உலகைப் படைக்கும்போது வேறுபாட்டை விரும்பிப் படைத்திருக்கிறார் என்று தோன்றுகிறது. உலகில் ஆண்கள் மட்டுமில்லை, பெண்களும் உள்ளனர். வெறும் ஆண்கள்தாம் உள்ளனர், பெண்கள் இல்லை என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். ஆண்களுக்கு வாழ்க்கை வெறுத்து விடும். ஆகவே ஆணுக்கு எதிரான அம்சங்கள் கொண்ட பெண்ணும் படைப்பிலிருந்தால்தான் வாழ்க்கை சுவையாக



இருக்கும் என்று ஆண்டவனே நினைத்திருக்கிறார் போலும். அப்படியே ஒட்டுமொத்த மானிட இனத்தை எடுத்துக் கொண்டாலும், அனைவரும் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஐரோப்பியர்கள் வெண்மையாகவும், ஆப்பிரிக்கர்கள் கரிய நிறமாகவும், இந்தியர்கள் பிரவுன் கலராகவும், சீனர்கள் மஞ்சள் நிறமாகவும் காட்சியளிக்கிறார்கள். உலகில் எங்குச் சென்றாலும், எல்லா இடத்திலும் மனிதன் வெண்மையாகவே இருக்கிறான். அல்லது கருப்பாகவே இருக்கிறான் என்றால் வெண்மை நிறத்தின் மேலும், கருமை நிறத்தின் மேலும் வெறுப்பே வந்துவிடும். இவ்வாறு நிறங்கள் எல்லாம் வேறுபட்டே தெரிவதால்தான், வெண்மை நிறத்திற்கு ஒரு மதிப்பு வருகிறது. அப்படி உருவ வேறுபாடுதான் மனித வாழ்க்கையில் இருக்கிறது என்றில்லை. மத, மொழி, கலாச்சார வேறுபாடு என்றிவை-களெல்லாம் இருக்கின்றன. இந்தியாவில் ஜாதி ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் நாம் அதைப் பார்க்க முடியாது. முகமதிய நாடுகளுக்குச் சென்றால், அங்குப் பெண்களை வித்தியாசமாக நடத்துவார்கள்.

மனிதர்களுக்குள்ளேயே இத்தனை வேறுபாடு உள்ளபோது ஆண்டவனைப்பற்றிய மனிதனுடைய சிந்தனையும் பலவித-மாக வேறுபடுவதைப் பார்க்கிறோம். இந்தியர்கள் பல கடவுள்கள் உண்டு என நம்புகிறார்கள். அதனால் இந்த நாட்டில் சிவ பக்தன், கிருஷ்ண பக்தன், ராம பக்தன், காளி பக்தன் என்று ஆளுக்கொருவிதமான கடவுளை வழிபடுவதைப் பார்க்கிறோம். முகமதியர் மற்றும் கிருத்துவர்களை எடுத்துக் கொண்டால், கடவுள் ஒருவர்தான், பல கடவுள்கள் என்பதெல்லாம் பொய் என்று பேசுவார்கள். கம்யூனிஸ்ட் கட்சியினரையும், பகுத்தறிவு-வாதிகளையும் எடுத்துக் கொண்டால், இந்த உலகம் இயங்குவதற்குக் கடவுளே தேவையில்லை, கடவுள் என்பவனே மனிதன் ஏற்படுத்தியவர்தான், மனிதனின் கற்பனையில்தான் அவர் இருக்கிறாரே தவிர அவன் கற்பனையைத் தாண்டி அவரில்லை என்பார்கள். இப்படியாக நாம் பார்த்துக் கொண்டேயிருந்தால், எண்ணற்ற வகையில் மானிட கலாச்-சாரம் வேற்றுமையை வளர்த்துக் கொண்டுள்ளது. ஆகவே

தனித்தன்மையின் பிரதான அடையாளமே வேறுபட்டிருத்த-லாகும்.

சமூகத்தில் இப்படி வேறுபாட்டை வெளிப்படுத்துபவர்கள் முக்கியமாக ஒரு நாலைந்து விஷயங்களில்தான் தங்களுடைய வேறுபாட்டை அதிகமாக வெளிக்காட்டுவார்கள். சமூகத்தில் ஒரேமாதிரியாக காட்சியளிக்கின்ற சராசரி மனிதர்கள் 90% என்று வைத்துக் கொள்ளலாம். இந்தியர்கள் 10% தான் வேறுபட்டுக் காட்சியளிப்பார்கள். அந்த வேறுபாடு அவர்களுடைய **originality**, தன்னம்பிக்கை மற்றும் தன்னைச் சார்ந்திருத்தல், **unconventional behaviour**, அடுத்தவர் விமர்-சனங்களை மதிக்காமல் இருத்தல், சொந்த முடிவுகளில் திடமாக இருத்தல், தலைமை தாங்கி அடுத்தவரை வழிநடத்துதல் என்றெல்லாம் வெளிப்படும். அதாவது மேற்சொன்ன குண-விசேஷங்களில் ஏதேனும் ஒன்று ஒருவரிடம் வெளிப்பட்டாலும் அவர் தனித்தன்மை மிகுந்தவர் என்று நாம் புரிந்து கொள்ளலாம். இவற்றுள் பிரதானமான **originality**-க்கு வருவோம்.

**Originality**-யை நாம் பல இடங்களில் பல்வேறு ரூபங்களில் சந்திக்கிறோம். அதுவொரு புதிய **idea**-வாக வெளிப்படலாம். அதற்கும்மேல் போய் புதிய கண்டுபிடிப்பாகவும் வெளிவரலாம். புதிய சமூக அமைப்பாகவும் அது இருக்கலாம். மேலும் எல்லோருக்கும் தெரிந்த விஷயமாக இருந்தாலும் முதன்-முதலாக இவர்தான் எடுத்துச் செய்தார் என்றும் வரலாம். புதிய **idea** என்றால், மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவன் என்ற புரட்சிகரமான ஒரு கருத்தை டார்வின்தான் முதன்முதலாகச் சொன்னார். நாமெல்லாம் குரங்கைப் பார்க்கும்போது மனிதனைப்போல் கண், மூக்கு, காதுகள் எல்லாம் உள்ளனவே என்று தோன்றத்தான் செய்கிறது. அதிகபட்சமாக மனிதனும் குரங்கும் ஒன்றாக உள்ளனர் என்று நமக்குச் சொல்லத் தோன்றுகிறது. இதற்குமேல் நம் சிந்தனை ஓடுவதில்லை. இந்த இடத்தில்தான் டார்வின் நம்மிடத்திலிருந்து வேறுபட்டி-ருக்கிறார். உருவ ஒற்றுமையை கவனித்த அவர் அடுத்த கட்டமாக சிந்திக்க ஆரம்பித்தார். குரங்கும், மனிதனும் ஒரேமாதிரி இருக்கின்றனர் என்றால், ஏன் குரங்கிலிருந்து



மனிதன் பிறந்திருக்கக் கூடாது, இப்படித்தான் அவர் சிந்தனை **original**-ஆக எழுந்தது. நூறு ஆண்டுகளுக்கு மேலாக இந்த சிந்தனை உலகில் பரவியிருப்பதால், இன்று இது நமக்கு அவ்வளவு புரட்சிகரமாகத் தெரியவில்லை. ஆனால் டார்வின் வாழ்ந்த காலத்தில் ஆண்டவனே நேரடியாக மனிதனை பொம்மையாகப் படைத்தான் என்றும் அந்த பொம்மையின் வாயில் ஊதி மூச்சுக்காற்றை உருவாக்கி சுவாசத்தை உண்டு பண்ணினார் என்றும் பைபிளில் சொல்லப்பட்டதை பரவலாக நம்பிக் கொண்டிருந்தார்கள். அதனால் டார்வின் அப்படி நினைக்காமல் வேறுவிதமாக நினைத்தது புரட்சிகரமாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

புதியதாக ஒரு எண்ணம் உருவாவது **originality** என்றால், புதியதோர் சமுதாயக் கொள்கையையே உருவாக்குபவர்களும் உள்ளார்கள். அதையும் நாம் **originality**-க்கு அடையாளமாக எடுத்துக் கொள்ள வேண்டும். சோஷலிச கொள்கைகள் 1800-ஆம் ஆண்டுகளிலிருந்தே ஐரோப்பாவில் பிரபலமாகப் பரவி இருந்தன. ஆனால் அவற்றிற்கு முறையான ஒரு விளக்கம் கொடுத்து சோஷலிஷத்தை தவிர்க்க முடியாது, முதலாளித்-துவத்தை அடுத்து வரப்போவது சோஷலிசம்தான், அது புரட்சியால்தான் வரும், முதலாளித்துவம் **(Capitalism)** நிலை-யானதில்லை, இதன் ஆயுட்காலம் முடியும் நேரம் வந்துவிட்டது என்றெல்லாம் விளக்கம் கொடுத்து சோஷலிசத்தைவிட உயர்ந்த கொள்கையாக கம்யூனிசத்தை அறிமுகப்படுத்தியவர் காரல்மார்க்ஸ் அவர்கள். அவர் கம்யூனிசத்தை ஆதரித்ததால், தனித்தன்மை அற்றவர் என்று நினைக்கத் தோன்றும். ஆனால் அவர் உண்மையில் தனித்தன்மையை மிகவும் வலியுறுத்தியவர். முதலாளித்துவ பொருளாதார முறையில், உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகள் பறிக்கப்படுவதால் அதைத் தவிர்க்க கம்யூனிசப் பொருளாதார முறைக்கு மாறினால், உழைக்கும் வர்கத்தினரின் தனிப்பட்ட உரிமைகள் பாதுகாக்கப்படும் என்பதால்தான் கம்யூனிசத்தை ஆதரித்தார் என்று தெரிகிறது.

(தொடரும்)

## நிலையான சமர்ப்பணம் – நெடு நாளைய யோகம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

தவம் புற முயற்சி அகத்திற்கு மாறி தரும் ஆத்ம பலன். *யோகம் அகம் முதிர்ந்து புறத்தில் பிரபஞ்சம் முழுவதும் பரவி அசையாத ஆத்மாவை அனைவரிலும் திருவுருமாறச் செய்து*, முழுப்பலனை ஒவ்வொருவரும் அனுபவிக்கச் செய்வது. *அந்த ஆனந்தத்தை நாடி பிரம்மம் சிருஷ்டித்தது என பகவான் கூறுகிறார்.*

சாதகன் சரணாகதியால் யோகத்தை ஏற்று உலகத்தின் சார்பாக அதைப் பூர்த்தி செய்வது யோகம். *யோகத்தின் வாயிலை அடைவது யோக வாழ்க்கை.* நிலையான சமர்ப்பணம் அதற்குரியது. சமர்ப்பணம் நிலைத்தால் தெரியும். அதற்குரிய அறிகுறிகள் பல. அதில் ஒன்று, பக்தன் செய்யும் ஒரு காரியம் அபரிமிதமாக அளவுகடந்து பலிப்பது. உலகம் எல்லாத்-துறைகளிலும் முன்னேறி நாகரிகமடைந்துள்ளது.

பகவான் கண்டது *சத்திய ஜீவியம்.* அவர் ஆத்மா என அறிந்தது மரபிலிருந்து ஏராளமாக மாறுபட்டது. குதிரை வீரன் செய்தியை எடுத்துப் போனான். ஒருவர் அருகில் உள்ள ஒருவருக்கு அனுப்பும் செய்தி அது. இன்று **email** உலகெங்கும் செய்தியை மக்களிடையே எடுத்துச் செல்கிறது. மரபின் ஆத்மாவுக்கும் யோகம் காணும் ஆத்மாவுக்கும் அது போன்ற மாறுபாடுண்டு.

*அவ்வளவு பெரிய அற்புதம் உலகில் உதித்துள்ளது எனில் நாம் பெறக்கூடியது என்ன?* அது எவருக்குரியது? அது யோகத்தில் எது போன்றது? வாழ்வில் அதன் உருவம் என்ன? தலைப்பு *''நிலையான சமர்ப்பணம்''* எதைப் பெற்றுத் தரும். அவற்றில் குறைந்தபட்சம், அதிகபட்சம் உண்டா? நாம் எங்கிருக்கிறோம்? இதெல்லாம் நம்முடன் தொடர்பு கொண்டனவா? 'முடவன் கொம்புத்தேன்' போன்றதா? அனைவரும் அளவுகடந்து உரிமையுடன் பெறுவதை அறிவில்லாமல் ஒருவர் இழந்து நிற்பதைக் குறிக்குமா? *விஷயம் பெரியது என்றால் நம்மைப் போன்றவர் விலகிக் கொள்ளுதல் சரியா?*



விஷயம் பெரியதானாலும் அம்சமும் இராசியும் உள்ளவர் விழிப்பாக இருந்தால் தவறாது பெறலாம். தவறாது பெறத் தகுதி விழிப்பு, முயற்சியாகுமா? ஒரு வகையில் 400 ஆண்டுகட்கு முன் அமெரிக்காவிற்குச் சென்ற கோடிக்-கணக்கான ஏழைகள் ஏராளமான நிலம் எவர் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலையிருந்தது. வரியில்லை, வரம்பில்லை, சட்டமில்லை. *சுதந்திரம் எல்லா வகையிலும் சுபீட்சமாயிற்று.* அந்த நிலை இன்று அவர்களை உலகத் தலைவராக்கியது. பேரளவுக்கு அடிப்படையில் சிறு விஷயங்களில் அமெரிக்க வாழ்வு பகவான் கூறுவதற்கு உதாரணமாக அமையும். அமெரிக்கா பெற்றது செல்வம். யோகம் அளிப்பது பேரானந்தம். பேரானந்தப் பெருநிலைக்கு அமெரிக்க செல்வம் உட்பட்டது. உதாரணம் பொதுவானது.

ஆசிரமத்தைப்பற்றி அன்னையின் கொள்கைகள் அடிப்-படையானவை. *யோகம் செய்யும்படி எவரையும் அழைப்ப-தில்லை;* தானே விரும்பி வந்தவர்களில் தகுதியுள்ளவர்களை மூன்று மாதம் சோதனை செய்து சேர்த்துக் கொள்வது; *ஆர்வமுள்ளவர்க்கு அனைத்து ஆதரவும் தருவது;* பிரசாரத்தைத் தவிர்ப்பது; பணம் வசூல் செய்வதில்லை; காணிக்கையாக வருவதை ஏற்பது. பிரசாரத்தை முழுவதும் தவிர்த்தாலும் உலகுக்கு பகவான் தத்துவத்தை, எழுத்துகளை யோகத்திற்காக அனுமதித்தாலும், அனைவரும் பிரம்மச்சர்யம் ஏற்பது, *எந்தக் கட்டுப்பாட்டையும் அமுல் செய்யாதது,* தவறு செய்வதைக் கண்டிக்காதது இவை பெரிய சட்டங்களாதலால் நடைமுறை-யில் இந்த நோக்கம் எந்த ஸ்தாபனத்தையும் எளிதில் உடைத்து விடும். *உலகை ஆண்டவன் 'நிர்வாகம்' செய்தது போல் அன்னை ஆசிரமத்தை நிர்வாகம் செய்தார்.* இவை பார்வைக்கு முரணானவை, *பக்குவத்திற்குத் திறனுள்ளவை.* எப்படி நிர்வாகம் நடந்தது என்பவை அச்சில் வந்தவை மட்டும் நானறிவேன். உலகம் என்ற சமூகம் எப்படி நாகரிகமடைந்தது என்பதை நாமறிவது போல் உலகம் எப்படி யோகத்தை இதுவரை ஏற்றது என அறியலாம். அதன் சுருக்கம் ''*பெரியது பெரியதுதான் சிறியது சிறியதுதான். சிறியது* பெரியதாகாது. என்றாலும்

வாழ்வின் அமைப்பு அதற்கும் இடம் கொடுக்காமலில்லை. **(Period of transition)** மாறும் நேரமான புரட்சி வேளையில் அடிமட்ட மக்கள் உயர்மட்டத்தை ஏராளமாக எல்லா நாட்டிலும் எட்டுகிறார்கள். *தகுதியுள்ளவன் விரும்பினால் முயற்சிக்குப் பலன் உண்டு.* உலக வாழ்வு மலரும் நேரம் உச்சாணி கொம்பிற்கு ஓரிருவர் போனது மாறி ஓரிரு நூறு பேர் அல்லது ஆயிரம் பேர் போகலாம் என்ற நிலையைச் சத்திய ஜீவியம் ஏற்படுத்தியுள்ளது.''

*இதுவரை உலகம் முன்னேறிய முறை மூலம் நாம் நம் யோக வாழ்வை அறிய முடியும் எனில் அதை நாம் கருதலாம்.* ஐந்து அல்லது ஆறு நூற்றாண்டுகட்கு முன் ஐரோப்பிய மக்கள் பின்தங்கியவராயிருந்தனர். அவர்கள் வாழ்வில் எந்தச் சிறப்புமில்லை. 2500 ஆண்டிற்குமுன் கிரீஸ் நாகரிகம் பெற்ற நாடாக இருந்தது. ஓராயிரமாண்டிற்குப் பின் அந்நாகரிகம் ரோமாபுரி வந்து ரோம சாம்ராஜ்யம் ஏற்பட்டு 500 ஆண்டுகள் ஆண்டபின் அழிந்தது. அதன்பின் இருண்ட நூற்றாண்டுகள் என ஐரோப்பிய வாழ்வு விவரிக்கப்பட்டது.

அன்று மனிதன் உலகில் என்ன ஞானமிருந்தது என்று அறியவில்லை. அறிய ஆரம்பித்தபின் புலமை மிக்கவர் அறியும் வழியில்லை. **Dictionary** என்பதே எந்த மொழியிலும் இல்லை. அவனவன் கண்டதே அவனுக்கு அதிகபட்ச ஞானம். ஆனால் ஞானம் எல்லாத்துறைகளிலும் வளர்ந்தது. *வளர்ந்த ஞானம் அனைவரும் பெறும்படி அமையவில்லை.* 1770-ஆம் ஆண்டு சிலர் கூடி கலைக்களஞ்சியம் **(Encyclopedia)** எழுதினர். உலக ஞானம் முழுவதும் அடங்கிய நூல் - 30 **Volumes** - இது. உலக வரலாற்றில் இது ஒரு பெரிய முக்கிய கட்டம். **Printing** அச்சு வந்ததால் ஏற்பட்ட முன்னேற்றமிது. முப்பது **Volume**-களில் உலக ஞானம் தொகுத்து எழுதப்பட்டால் ஒரு குறிப்பிட்ட செய்தியை - டெல்லி - எப்படித் தேடி எடுப்பது? அதனால் கலைக்களஞ்சியம் அச்சிடப்பட்டாலும் அது பயன்படாது. *அகர வரிசை* **(alphabetical order)** *3000 ஆண்டுகட்குமுன் எழுந்தது.* அதற்கடுத்த முறை இன்னும் எழவில்லை. அகர வரிசையிருப்பதால் எதையும் உடனே தேடி எடுக்க முடியும்.



அகர வரிசையும் அச்சும் கலைக்களஞ்சியம் உற்பத்தியாக 200 ஆண்டிற்குமுன் உதவியது.

இக்கட்டுரைக்கு நேரடியான தொடர்பு இல்லாவிட்டாலும் நாம் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அது *எண்.* இன்று 1, 2, 3, 4 எனவும் 10, 405, 5607 எனவும் வழங்கும் எண் **Arabic numerals** என உலகம் அறியும். ஏனெனில் ஐரோப்பா எண்ணை அரபு நாட்டிலிருந்து பெற்றது. அரேபியா அதை இந்தியாவினின்று பெற்றதை உலகம் அறியும். நாமறிவதில்லை. இதன் அமைப்பு **decimal** அதாவது 978 என்றால் 8 என்பது 8 ஒன்று, 7 என்பது 7 பத்து, 9 என்பது 9 நூறு. ஒன்று, பத்து, நூறு என பத்து மடங்காக எழும் வரிசையை **decimal numbering** என்போம். இது இந்தியாவில் பழங்காலத்தில் ஏற்பட்டது. *இதற்கடுத்த கட்டம் உலகில் எழவில்லை.* அகர வரிசையும் **decimal** எண்ணும் உலக வரலாற்றில் பெரிய முதல் மைல்கற்கள். அறிவு அதைக் கடந்து இன்னும் வரவில்லை. பாடம் எனில் பள்ளியில் கற்பது. படம், மடம், அ, ஆ, இ, ஈ, **A, B, C, D** எனப் பெயர். மேதைகள் சிறு வயதிலேயே பள்ளிக்கும் போக மறுத்து மேதையாயினர். பெர்னார்ட்ஷா, இரவிந்திரநாத் தாகூர் பள்ளியை விட்டு வெளியேறினர். பள்ளிப்பாடம் மேதைகட்குதவாது என்று உலகம் 100 ஆண்டிற்கு முன் கண்டது. பள்ளிக்குப் போகாமல் பாடம் எப்படி கற்பது? வீட்டிலே படிப்பவர் 14-ஆம் வயதில் படிப்பை முடித்த அனுபவம் உண்டு. அவர்கள் கலைக்களஞ்சியத்தை பாட புத்தகமாகக் கொள்ளலாம். கொள்ளலாம் எனில் அதைப் படித்தவர் பையனுக்கு வழி காட்ட வேண்டும். 1960 முதல் 1970 வரை கலைக்களஞ்சிய ஆசிரியருக்கு இந்த எண்ணம் தோன்றியது. ஒருவர் பள்ளியை விட்டு வெளிவந்து சொந்தமாகப் படிக்க முயன்றால் கலைக்களஞ்சியம் அவருக்குப் பாட நூலாக **(Text Book)** அமையும். அமையும் எனில் அதற்கொரு அட்டவணை தேவை.

(தொடரும்)

# அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

**9. பிரார்த்தனை**

*சாவித்திரி:*

'மனித வாழ்வு பரம்பொருளின் பேரருளுடன் இணைந்தால் அற்புதம் மலரும். மலர்ந்த அற்புதம் அன்றாடமும் மலரும். அதை நிகழ்த்தவல்லது மேதையின் புதிய கருத்து, வீரனின் தீரச்செயல், பக்தனின் பிரார்த்தனை' என்ற பொருளில் பகவான் ஸ்ரீ அரவிந்தருடைய காவியமாகிய சாவித்திரியில் இரண்டு வரிகள் உண்டு. உயர்ந்த செயலுடனும், உன்னதமான எண்ணத்தோடும் பகவான் பிரார்த்தனையை ஒப்பிடுகின்றார். தெய்வங்களைச் சிருஷ்டித்த பரம்பொருளை நாம் பலவாறு குறிப்பிடுகிறோம்; பிரம்மம் என்பது ஒரு வழக்கு; சச்சிதானந்தம் என்பது மற்றொன்று. ஆதி, அனாதி என்றெல்லாம் நாம் அறியும் பரமனைவிட உயர்ந்த ஒன்றை இவ்வுலகம் பெற்றதில்லை. மேல் உலகத்திற்கும் பரமனைவிட உயர்ந்த நிலையொன்றில்லை. மனிதன் பாமரன். அப்பாவி மனிதனுக்கு அனாதியான பரமன் வரம் அருள விழைந்து அதற்குரிய திறனாகப் பிரார்த்தனையை வழங்கியிருக்கின்றான். இதை மனிதன் முழுவதுமாக உணர்ந்தானிலன்; உபயோகப்படுத்துவதுமில்லை. நான் அளித்த கருவியைப் பயன்படுத்தி, என்னை அழைத்து உன் வாழ்வில் செயல்பட அனுமதித்தால், செயல்களை அற்புதங்களாக நான் அனுதினமும் மாற்றிக் கொடுக்கிறேன் என்று அவன் விடும் வானுலக அறிக்கை ஒலிபரப்பப்படாமல் விட்டுப்போன ஒன்று.

வாழ்க்கை நொடித்து, கஷ்டம் வந்த காலத்தே பக்தன் பிரார்த்தனை செய்வது வழக்கம். சிறப்பாக வாழ்க்கை நடக்கும் பொழுது மனிதன் பிரார்த்தனை செய்வதில்லை. பழக்கமாக ஏற்றுக் கொண்ட தினசரி வழிபாட்டிற்குமேல் அவன் செல்வதில்லை. கஷ்டத்தை விலக்கப் பயன்படும் பிரார்த்தனை



கருவூலம் போன்ற ஆன்மிகச் செல்வத்தை அளவின்றி பெற்றுத்தரும் என்பதை மனிதன் மறந்து விட்டான். கெட்டதை விலக்க மட்டுமே பிரார்த்தனையை நாடும் மனிதன் நல்லதைச் சேர்க்க வேண்டும் எனும்பொழுது பிரார்த்தனையை நாடுவதைவிட தன் முயற்சியையே பெரிதும் நம்பிச் செயல்படுவான். பிரார்த்தனை செய்ய நினைத்தால், தன் முயற்சி பலிக்க வேண்டும் எனப் பிரார்த்திப்பான். தன் முயற்சி எல்லாம் தோற்ற பின்னரே, பரம்பொருள் தன் வாழ்வில் செயல்பட வேண்டும் என்று பிரார்த்தனை செய்வான்.

தெய்வத்திடம் எதைக் கேட்கலாம் என்ற கேள்விக்கு அன்னை பதிலிறுக்கும் வாயிலாக 'எதையும் கேட்கலாம்' என்று ஆரம்பித்து விளக்கியபின் 'மனிதன் தானும் தெய்வமாக வேண்டும் என்று மட்டும் கேட்பதே சிறந்த பிரார்த்தனை' என்று அன்னை முடிக்கின்றார். பரம்பொருளே இம்மையிலும், மறுமையிலும் சிறந்ததெனினும், அதை அடைய பிரார்த்தனை உகந்த கருவியெனினும், மனிதனைப் பொறுத்த வரையில் பிரார்த்தனைக்கு முக்கியத்துவமில்லை. பெண்டு, பிள்ளை, வீடு, கன்று, மாடு, தனம் மட்டுமே அவன் கவனத்திற்கும், கவலைக்கும் உரியதாக இருக்கின்றன. காலம் மாறியதால் மனிதன் மாறினான் என்றால், அந்த மாறிய நிலையிலும் பரமனுக்கும், பிரார்த்தனைக்கும் இடம் இல்லை. பட்டியலில் கன்று, மாடு மாறி, T.V., ஸ்கூட்டராக இருக்கலாம்.

மனிதனுடைய பட்டியலுக்கு வெளியேயுள்ள விஷயங்கள் எவ்வளவு உயர்ந்தவையானாலும், மனிதனுடைய கவனத்தை அவற்றின் பக்கம் திருப்பும் சக்தி உலகத்தில் இல்லை. மந்திரமானாலும், ஜோசியமானாலும், அரசியல் உரிமையானாலும், அந்தராத்மாவின் குரலானாலும், குறி சொல்வதானாலும், தன் பட்டியலைப் பூர்த்தி செய்வதானால், மனிதனுக்கு அதில் ஆர்வமிருக்கும்; மற்றதெல்லாம் அவனுக்கு அவசியமில்லை. முனிவர்கள் உலகத்தைத் துறந்தார்கள் எனில், மனிதன் தெய்வ வழிபாட்டை இம்மையில் துறக்க முயல்கின்றான். மனிதனுடைய தெய்வம் அவனது அன்றாட

வாழ்வு. அதில் உயர்ந்த கட்டங்களை அடைவதே அவனுடைய குறிக்கோள்.

ஆன்மிகம் உலகத்தைத் துறந்தது; துறவறம் பூண்டது. அன்னை உலகத்தைத் துறக்கவில்லை. மாறாக, அன்னை தம் ஆன்மிக வாழ்வை அன்றாட மனித வாழ்வில் நிலைநிறுத்தப் பாடுபடுவதையே தம் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். பரம்பரையான ஆன்மிக மரபிலிருந்து அன்னை முற்றிலும் மாறுபடுவதைப்போல, மனித வாழ்விலிருந்தும் அன்னை வாழ்வு முற்றிலும் மாறுபடுகிறது.

மரபு, இல்லறத்தைத் துறந்தது. மக்கள் இல்லறத்தை நடத்த எதையும் துறக்கத் தயாராக இருக்கிறார்கள். இல்லறம் செம்மையாக நடக்குமானால், வாழ்க்கை வளம் பெற்றதாக இருக்குமானால், மனிதனுக்கு அதைக் கொண்டுவரும் மார்க்கங்கள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளக்கூடியவையே. நியாயமாகச் சம்பாதிக்காத பணம் தேவையில்லை; சிபாரிசு மூலம் உத்தியோகம் பெறக்கூடாது; பணத்தால், சிபாரிசால், அந்தஸ்தால், குறுக்கு வழியால் சாதிக்கப் பட்டவை விலக்கப்பட வேண்டியவை என்று கருதுபவர்கள் குறைவு. பணத்தைச் சம்பாதிப்பது அவசியம்; உத்தியோகம் அத்தியாவசியம்; அவற்றையடைய உபயோகப்படும் சாதனங்கள் சிறந்தவை என்ற மனப்பான்மைக்கு மெஜாரிட்டி உண்டு.

அன்னை மனிதனிலிருந்தும், மரபிலிருந்தும் வேறுபட்டவர். வாழ்க்கையை முழுவதுமாக ஏற்றுக்கொண்ட அன்னை, மனிதனுடைய அத்தியாவசியமான அனைத்தையும் ஆர்வத்துடன் ஏற்றுக் கொள்கிறார். அவற்றை அவனுக்கு முழுமையாகக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை உணர்கிறார். ஆனால் வாழ்க்கை இருளாலும், பொய்யாலும் சூழப்பட்டது. வாழ்க்கையிலுள்ள ஒளியும், மெய்யும் கண்ணுக்குத் தெரியும் அளவிலில்லை. பாமரனையும், பாமரனின் அத்தியாவசியங்களையும், அவனது இல்லறத்தையும் ஏற்றுக்கொள்ளும் அன்னை, அவற்றைப் பவித்திரமான பாத்திரமாக ஏற்றுக்கொள்கிறார். பரமனையடையும் பாதையில் முதற்படியாக ஏற்றுக்கொள்கிறார். இருளுக்கும், அகந்தைக்கும் மரபு வழிவந்த



ஆன்மிகம் அளிக்கும் அளவுக்குக்கூட அன்னை மனிதனுடைய இல்லறத்தில் கொடுக்கத் தயாராக இல்லை. அதற்காக அவன் பிரார்த்தனையை எப்படிப் பயன் தரும் வகையில் பயன்படுத்துவது என்பதே இக்கட்டுரையின் மையக்கருத்து.

*அன்னையின் இல்லறம்*

மனிதன் பாதையை மாற்றிக்கொள்ள வேண்டும். மறுமையில் இறைவனடியை விழையும் உலக மாந்தர், இம்மையில் இறைவனின் திருவுள்ளத்தை இல்லறத்தில் பூர்த்தி செய்ய முன்வர வேண்டும். பாதையின் போக்கு பரமனை நோக்கி அமைய வேண்டும். அகந்தைக்கு இடம் இல்லை. ஆன்மிகச் சிறப்பானாலும் அடக்கத்திற்கே உயர்வு. அகந்தைக்கு ஆசனமில்லை. வறுமையும், வெறுமையும் நிறைந்த மனித வாழ்வை வளமும், நிறைவும் உள்ளதாக மாற்ற அன்னை மஹாலட்சுமியாக வரக் காத்திருக்கின்றார். ஆனால் அசுரனுடைய பிடியிலிருந்தும், மருளின் மயக்கத்திலிருந்தும் மனிதன் விலகி வந்து, பரமனையும், பகவானையும் நோக்கிப் புறப்பட்டால் அன்னை அவன் மனதை ஆன்மிக ஞானத்தால் நிரப்பவும், அவன் உயிரைக் காளியின் வீரியத்தால் காக்கவும், வாழ்வை மஹாலட்சுமியின் வரப்பிரசாதம் ஆக்கவும், செயல்களைச் சரஸ்வதியின் திறத்தால் மிளிர வைக்கவும், ஆர்வத்துடன் காத்திருக்கின்றார்.

இருளை விட்டு ஒளியை நாடும் மனிதனுடைய இல்லறம் அன்னையின் ஆன்மிகச் சிறப்புள்ள அற்புதமான துறவறமாகும்.

தொடரும்...

❀❀❀

## ஜீவிய மணி

*ஆன்மிகம் அறிவைவிட உயர்ந்தது. உழைப்பு, உணர்வு, அறிவு ஆகியவை ஆன்மிக மெருகு பெறும் பொழுது அமைதியாகும். நிதானம் பெறும். பொறுமை எழும். ஆன்மிகம் எண்ணத்திற்கு அடிப்படையானால், நாம் ஏற்கனவே செய்தவை ஏராளமாக உயரும். தானே உயர்வது ஆன்மிக இயல்பு.*

# இம்சிக்கும் வம்சி

சமர்ப்பணன்

**சிந்தனைகளும், கருத்துமொழிகளும் – 407**

*I am not a Bhakta, for I have not renounced the world for God. How can I renounce what He took from me by force and gave back to me against my will? These things are too hard for me.*

- Sri Aurobindo

*நான் பக்தனல்ல.*

*ஏனென்றால் நான் இறைவனுக்காக உலகைத் துறக்கவில்லை.*

*பலவந்தமாக என்னிடமிருந்து பறித்த உலகை இறைவன் என் விருப்புறுதிக்கு எதிராக என்னிடமே திருப்பித் தந்தான்.*

*அதை நானெப்படித் துறக்க முடியும்?*

*இவையெல்லாம் எனக்குக் கடினமானவையாக இருக்கின்றன.*

பக்தி உணர்வெழுச்சியால் ஆனது. எதன் மீது பக்தி செலுத்துகிறோமோ அதைத் தவிர பிற அனைத்தையும் மறக்க வைப்பது. பக்தியில் மூழ்கியவர்கள் உணவையும், உடையையும், உறவுகளையும், உடைமைகளையும் பொருட்படுத்துவதில்லை. தன்னிலை இழந்தவர்களாக, பித்து பிடித்தவர்களாக மாறி விடுகிறார்கள். இறைவனே அனைத்துக்கும் உரியவன் என்ற உணர்வில் வாழ்கிறார்கள். இது இறைவனைத் தவிர வேறெதிலும் பற்றற்ற, உலகைத் துறந்த பித்து நிலை.

ஸ்ரீ அரபிந்தோ தன் யோகத்தைப் பூரண யோகம் என்றழைத்தார். பூரணயோகம் வாழ்வில் எல்லாவற்றையும் ஏற்கும் ஒன்று. எதையும் துறப்பதோ, விலக்குவதோ பூரணயோகத்தில் இல்லை. உலகத்தைத் துறந்த பக்தன் பூரணயோகி ஆக முடியாது. எனவே அவன் பூரண யோகத்திற்கு விலக்கானவன், பொருத்தமற்றவன்.

எதையும் விலக்காமல், துறக்காமல் வாழ்வில் உள்ள அனைத்தையும் ஏற்றுச் செல்லும் நீண்ட பாதை பூரண யோகப் பாதை. எதையும் விலக்காத பூரண யோகம் பக்தி மார்க்கத்தை மட்டும் விலக்குவதை எப்படி ஏற்க முடியும்? பூரண யோகி பக்தனாகவும் இருக்கத்தானே வேண்டும்?



எதிரான இரண்டு கருத்துகளுக்கு முன் திகைத்து நிற்கிறோம். பக்தர் என்றால் இறைவனுக்காக உலகைத் துறக்க வேண்டும். துறக்காதவன் பக்தனல்ல. பூரண யோகியோ பக்தனாகவும் இருக்க வேண்டும், எதையும் துறக்கவும் கூடாது. பூரண யோகி ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் பாதை பலவாகப் பிரிந்து எது சரியான வழி என்ற திகைப்பை ஏற்படுத்தும்.

சமர்ப்பணத்தைப் பற்றி அறிந்த பின் ‘என் உடைமைகளை இறைவா உன்னிடம் சமர்ப்பணம் செய்து விட்டேன்’ என்று மேற்பரப்பு மனத்தில் நின்று கூறுகிறோம். ஆனால் நம் உடைமைகளின் மீது நம் உரிமையை, நம் பிடியை, நம் ஆதிக்கத்தை, அகத்தில் ஒருபோதும் நழுவ விடுவதேயில்லை. அவற்றின் மீது இறைவனின் ஒளி படரவிடாமல் நம் கருநிழல் தடுக்கிறது. நம் கர்மம் கரையாமல் அதற்குரிய எதிர்மறையான பலன்களை அனுபவித்துத் துன்புறுகிறோம்.

எனவே, பூரண யோகிக்கு உதவுவதற்காக அவன் உரிமை கொண்டாடும் உலகை இறைவன் பறிக்கிறான். இனி ஒன்றும் செய்வதற்கில்லை என்ற கையறு நிலையைப் பூரண யோகி அடைகிறான். அந்த நிலையில் அவனிடம் அனைத்தையும் துறந்துவிடும் பக்குவம் உண்டாகிறது. பற்றிக் கொள்ள எதுவுமில்லாததால் அவனுடைய அகந்தை செயலற்று விடுகிறது. ‘இனி இறைவனைத் தவிர எதுவும் தேவையில்லை’ என்ற மனநிலையில் இருக்கும் மனிதனுக்குத் தான் பறித்துக் கொண்டதை இறைவன் திருப்பித் தருகிறான்.

இப்போது பெற்றது இறைவனின் பொருள். அதன் பாதுகாவலனாக இருக்க மட்டுமே பூரண யோகிக்கு உரிமையுண்டு. இறைவனுக்கு உரிய உலகைத் தனக்கு உரிமை இல்லாத ஒன்றைப் பூரண யோகி எப்படித் துறக்க முடியும்?

மாறிய நிலையில், பூரண யோகி துறப்பதற்கென்று எதுவுமற்ற, பக்தனாகவும் இருக்கிறான், பக்தி மார்க்கத்தை

தழுவும் தகுதி பெற்ற சாதகனாகவும் இருக்கிறான். உலகத்தை விட்டு விலகி நிற்காத பூரண யோகியாகவும் இருக்கிறான்.

‘நான் பக்தனல்ல. ஏனென்றால் நான் இறைவனுக்காக உலகைத் துறக்கவில்லை’ என்பது மரபுப்பார்வை பூரண-யோகத்தின் மீது வைக்கும் விமர்சனத்தைக் குறிக்கிறது.

‘பலவந்தமாக என்னிடமிருந்து பறித்த உலகை இறைவன் என் விருப்புறுதிக்கு எதிராக என்னிடமே திருப்பித் தந்தான், அதை நானெப்படித் துறக்க முடியும்?’ என்பதன் மூலம் பூரணயோகம் ஏன் எதையும் துறக்கத் தேவையில்லை என்று கூறுகிறது

‘இவையெல்லாம் எனக்குக் கடினமானவையாக இருக்கின்றன’ என்பது பூரணயோகத்தின் கடுமையைக் குறிக்கிறது.

‘ஈஷா வஸ்யம் இதம் சர்வம்’ என்ற ஈஷா உபநிஷத மந்திரம் ‘அடுத்தவருக்கு உரிய பொருள் மீது ஆசைப்படாதிருப்பாயாக’ என்று கூறுகிறது. அடுத்தவருக்கு உரிய பொருள் என்பது இறைவனுக்கு உரிய பொருளைக் குறிக்கிறது. அதன் மீதுள்ள பற்றை விட்டுவிட வேண்டும். ஆனால் இறைவனின் பொருளை பொறுப்புடன் பேணிப் பாதுகாக்கும் கடமை யோகிக்கு உண்டு. ‘மதர்’ என்ற சிறு நூலில் ‘பணத்தின் மீது பற்றின்றி, அதை இறைவனுக்குரியது என்ற புரிதலோடு கவனமாகக் கையாள வேண்டும்’ என்று ஸ்ரீ அரபிந்தோ கூறுகிறார். நம்மிடம் உள்ள பொருட்கள், காலம், இடம் அனைத்தும் இறைவனுக்குரியவையே. எனவே அவற்றைத் துறக்காமல், வீணாக்காமல் கவனமாகப் பராமரிப்பது நம் கடமை. நம் மனித உரிமையை நிலைநிறுத்த முயன்றால் இறைவன் அப்பொருளை நம்மிடமிருந்து பறிப்பான். அறிய வேண்டியதை அறிந்தால் அப்பொருள் இறைவனின் பொருளாக நம்மிடம் திரும்ப வரும். பக்தனிடமிருந்து காணிக்கையைத் திருடுவதும், பறிப்பதும் இறைவனுக்குப் பிடித்தமான விளையாட்டு.

பக்தி என்றதும் நினைவிற்கு வருபவள் ராதாராணி. கண்ணனைவிட வயதில் மூத்தவள். திருமணமானவள். தாய், தந்தை, மாமனார், மாமியார் உட்பட பல உறவுகள் கொண்டவள். கோசெல்வம் பெற்றவள். அனைவராலும் விரும்பப்பட்டவள். அனைவருக்கும் நல்லவளாக இருப்பதில் பேருவகை கொண்டவள். கண்ணன் மீது கொண்ட பிரேமையால் பித்தியானாள். எத்தனை நெருங்கியும், இத்தனை விலகி இருக்கிறோமே என்று ஒவ்வொரு கணமும் வேதனையுற்றாள். கண்ணன் தன் செயல்களால் ராதையை அனைத்துக் கடமைகளையும், உறவுகளையும், உறவையும் துறந்து, மறந்து, தன் பின்னே வர வைத்தான்.



இனி இழப்பதற்கு எதுவுமில்லை என்ற நிலைக்கு ராதை வந்தாள். அப்போது மாமன் கம்சனைக் காண மதுராவிற்குப் புறப்பட்டான் கண்ணன். கோகுலத்திற்கும், பிருந்தாவனத்-திற்கும் என்று திரும்புவான் என்பது எவருக்கும் தெரியாது. திரும்பி வராதிருக்கவும் வாய்ப்புண்டு. புறப்படுவதற்கு முதல் நாளிரவு, தன் உலகையும் - தன் வளர்ப்புத் தாய், தந்தையரான யசோதையையும், நந்தரையும் - பசுக்களையும் ராதையிடம் ஒப்படைத்தான் கண்ணன். ‘இனி நீயே இவற்றிற்குப் பொறுப்பு’ என்றான். தன்னைப் பார்த்துக் கொள்ளும் திறனை இழந்து பித்தியாகிவிட்ட ராதை, எப்படி இந்தப் புதிய உலகத்தை, புதிய மனிதர்களை, புதிய சொத்துக்களை பார்த்துக் கொள்ள முடியும் என்று பிருந்தாவனம் திகைத்தது.

‘நான் கண்ணன் கையில் மாடு மேய்க்கத் தவழும் வளைதடி. அவன் இதழ்களோடு இடைவிடாது உறவாடும் குழல். மேய்ப்பவன் அவன். இசைப்பவன் அவன்’ என்றாள் ராதை. ‘ஆம்’ என்ற கண்ணன் ‘இனி நான் பிருந்தாவனம் மீண்டபின்தான் குழலிசைப்பேன்’ என்று கூறி, வளைதடி-யையும், வம்சியையும் ராதையிடம் தந்து விடைபெற்றான்.

தன்னுலகைப் பொருட்டாக மதிக்காமல் துறந்த ராதை, கண்ணன் தந்த உலகை அவனை விடச் சிறப்பாகப் பார்த்துக் கொண்டாள். முப்பது வருடங்கள் கழித்து அவன் திரும்பி வரும்வரை தன் பொறுப்புகளைக், கடமைகளைக் கண்ணனை நினைத்தபடி செம்மையாகச் செய்து வந்தாள். அம்முப்பது

வருடங்களில் ஒருமுறை கூட அவனைச் சந்திக்கவில்லை. ஆனால். அவன் எப்போதும் அவளோடுதான் இருந்தான். ஒன்றாக இருப்பதாகவே ராதை உணர்ந்தாள்.

பக்தன் வேலையை நம்பும்போது அதை இழக்கிறான். எதை நம்பினோம் என்பதை மனிதன் உணரும்போது உயர்ந்த நிலையில் வேலையோ, வணிகமோ அமைகிறது. பக்தருடைய வணிகக் கல்வியின் மீது, அறிவின் மீது நம்பிக்கை இருந்தபோது, கோடி ரூபாய் முதலீடு செய்த தொழில் முற்றிலுமாக அழிந்தது. எதை நம்புகிறார் என்பதை உணர்ந்தபோது, அழியாத் தொழிலும், சமர்ப்பண அறிவும் அவருக்குத் தரப்பட்டன. அவர் இழந்தது சிறியது, பெற்றதோ பெரியது.

**இருளைப் பறித்து ஒளியைத் தந்து இம்சிப்பவன் இறைவன்.**

### ஜீவிய மணி

*18, 19-ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியர் அனைவரும் இந்தியாவிற்கு வர முனைந்ததின் காரணம் இங்கிருந்த பெரும் செல்வம். செல்வம், அரசியல் நுணுக்கம், வணிகம், கல்வி, சமூகப் பண்பில் அன்று இந்தியா தலைசிறந்து விளங்கியதாக பகவான் எழுதுகிறார். சரித்திரம் கூறுகிறது. அதன்பின் நாடு அடிமைப்பட்டு வறுமையை அடைந்தது. இன்று இந்தியர் முனைந்தால், நம் மூலத்தின் திறனை அறிந்து முனைந்தால், ஏற்கனவே பெற்றதை நினைந்து மீண்டும் அதைப் பெற முனைந்தால் எதிர்காலம் ஏற்றமிக்கதாகும்.*



## அன்பர் அனுபவம்

P. நடராஜன்

அன்பர், விவசாயத்தில் தீவிரமாக ஈடுபட்டுவருபவர். அவரது இல்லம் எளிமையானதாக இருந்தாலும், அன்னை முறைகளான சுத்தம் மற்றும் ஒழுங்கிற்கு (**orderliness**) எடுத்துக்காட்டான ஒன்று. வீட்டில் பொருள்களே இல்லையோ என்று எண்ணும்படியாக அவர் வீட்டில் சாமான்கள் ஒழுங்குற அமைந்திருக்கும் பாங்கு மனத்தைக் கவரும். வீட்டிற்கு வெளிப்புறம், வீட்டைச் சுற்றியுள்ள இடம் யாவும் துப்புரவாக இருக்கும். வீட்டின் உட்புறம், டிவி, வாஷிங் மெஷின் போன்றவை வைக்கப்பட்டுள்ள அனைத்து இடங்களும் சுத்தமாகவும், இருக்க வேண்டிய இடங்களில் கச்சிதமாகவும் இருக்கும். தியான அறை மிகவும் நேர்த்தியாக அமைந்திருக்கும். சுருங்கச் சொன்னால் வீட்டிற்கு வருபவர் கண்ணைக் கவரும் வகையில், நம் வீட்டையும் இப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என ஆர்வம் எழும்படியாக அன்பருடைய வீடு இருக்கும்.

கடந்த ஜூன் மாத இதழில் வெளிவந்த காணாமற்போன பொருள் அன்னைக்குக் காணிக்கை வைத்தவுடன் கிடைத்த அனுபவத்தை அன்பர் படித்துக் கொண்டிருந்தார். அதே நேரம் மனைவி, கொசு அடிக்கும் பேட்டைக் காணவில்லை என கடுகடுத்தார். சாதாரண பேட்டைவிட விலை அதிகமான பேட் அது. வீட்டில் இருக்கும் நேரமே குறைவு; புத்தகத்தைக் கூட படிக்க முடியவில்லையே என எண்ணியபடி, இந்தப் பக்கத்தை மட்டும் படித்து முடித்துவிட்டு தேடுவோம் என படிப்பதைத் தொடர்ந்தார்.

*அன்னையிடம் கூறியவுடன் அருள் காணாமல் போன பொருளின் ஜீவனைத் தீண்டும்* எனப் படித்தவுடன், தனது மகளிடம் மட்டும் இது பற்றிக் கூறி, இருவரும் தியான அறையில் காணிக்கை வைத்துப் பிரார்த்தித்துக் கொண்டனர்.

பின் வெளியே வந்து டிவி பார்க்க எண்ணி டிவி சுவிட்ச் போட குனிந்த போது, டிவிக்குப் பின்னால் உள்ள குறுகிய சுவர் அலமாரியில், கீழ்ப்படியில் தேடும் பேட் இருப்பதைக் கண்டார். ஆனந்தப்பட்டார். சூழல் மாறியது. தேடும் பொருள் சிறியதோ பெரியதோ, அன்னை வழியில் அது தன்னை

வெளிப்படுத்திக்கொள்ளும் பொழுது இன்னதென்று சொல்லத் தெரியாத ஆனந்தத்தை அளிக்கிறது என உணர்ந்தார்.

அவரது பெண், அன்னை ஒரு சூட்சும ஸ்தாபனம் என்று படித்ததை நினைவு கூர்ந்தார்.

★★★★

மற்றொரு அன்னை அன்பர், அன்னையின் தரிசனம் என்ற நூலை ஆழ்ந்து வாசித்தவர். அனைத்திற்கும் பதில் இந்தப் புத்தகத்தில் உள்ளது எனக் கூறுவார். ஆதார நூல் என்பார். ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகப் படிக்க வேண்டும் என வலியுறுத்திக் கூறுவார்.

மரவாடி மற்றும் மரம் அறுக்கும் தொழிற்சாலை வைத்துள்ளார். ஒரு நாள் மதிய உணவிற்குப் பிறகு சற்று ஓய்வெடுத்து, அலுவலகம் சென்றார். பணியாளரைத் தேநீர் எடுத்துவரச் சொன்னார். வாசலில் ஒரு ஜீப் நின்று கொண்டிருந்தது. அறையில் நுழைந்தால் நான்கு பேர்கள் அமர்ந்திருந்தனர். நாங்கள் squad என்றனர். வந்தவர்களில் ஒருவர் அடுத்தடுத்து கேள்விகள் கேட்டார். அன்பர் வந்தவர்களிடம் எதுவும் பேச-வில்லை. அன்னையை நினைவு கூர்ந்தார். எந்த விஷயத்தில் நாம் செம்மையாக இல்லை என்ற யோசனையில் மௌனத்தைக் கடைப்பிடித்தார். பணியாளர் கொணர்ந்த தேநீரை வந்தவர்-களுக்குக் கொடுக்கும்படி சைகை காட்டினார்.

அன்னை தரிசனத்தில், வரித்துறை அதிகாரிகள் வந்திருப்-பதாக சொன்ன அன்பருக்குத் திரு. கர்மயோகி அவர்கள் கூறியதாக வாசித்த வரிகள் அவரது நினைவிற்கு வந்தன.

**விளைவுகளைச் சந்திக்கும்போது பயமோ, பதற்றமோ கூடாது. பிரச்சனைகளை நேசக்கரம் நீட்டி வரவேற்கும்போது, அவை நமக்குச் சாதகமாக அமைந்துவிடும். தம் பக்தனுக்கு இதுபோன்ற ஒரு சூழ்நிலையைத் தந்து, அன்னை செம்மைப்படுத்துகிறார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.**

இதை நினைவு கூர்ந்த அடுத்த சிறிது நேரத்தில் ஐந்தாவதாக ஒருவர் உள்ளே நுழைந்து, மற்றவர்களிடம், 'சார் நாம் தவறான இடத்திற்கு வந்துள்ளோம். நாம் போக வேண்டிய இடம் வேறு' என்று சொல்லி அனைவரையும் அழைத்துச் சென்றார்.

அன்பர் நிம்மதியானார். அன்னைக்கு மானசீகமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.



## அன்னை இலக்கியம்

## பார்வைகள்

(ஜூலை 2015 இதழின் தொடர்ச்சி)

சமர்ப்பணன்

### 22. சந்துருவின் பார்வை

நீச்சல் தெரியாத பக்தன் ஒருவன் ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டான். 'இறைவா, என்னைக் காப்பாற்று' என்று அக ஆழத்திலிருந்து குரலெழுப்பினான். அப்போது அவனருகே படகொன்று வந்தது. 'ஏறிக் கொள்' என்றான் படகோட்டி. 'உன் உதவி எனக்கு வேண்டாம். இறைவன் என்னைக் காப்பாற்றுவான்' என்று கூறினான் பக்தன். படகு விலகிச் சென்றது. அதன்பின் வெள்ளத்தில் அல்லல்பட்டு எப்படியோ கரை சேர்ந்தான். 'இறைவா, ஏன் என்னைக் கைவிட்டாய்?' என்று வருந்தினான். அப்போது அப்பக்கமாக வந்த பெரியவர் 'எப்போதுமே பிரச்சனைக்குள்ளும், அதன் அருகிலும் இறைவன் தீர்வாக இருப்பான். இறைவன் மறைமுகமாக படகாக வந்தான். அவனை நீ பொருட்-படுத்தவில்லை என்பது உனக்குப் புரியவில்லையா?' என்றார்.

'இப்போது புரிகிறது' என்ற பக்தன் உற்சாகமாக காட்டு வழியில் நடக்கத் தொடங்கினான். இருட்டியபோது புதரில் ஓநாயின் எரியும் கண்களைக் கண்டான் பக்தன். 'இறைவா, காப்பாற்று' என்று அவன் நினைத்தவுடன் 'நேரில் செல்வதுதான் இவன் விஷயத்தில் சரி வரும்' என்று இறைவன் அவனருகே தோன்றினான். பயந்து போயிருந்த பக்தனுக்கு ஆண்டவனை அடையாளம் தெரியவில்லை. பெரியவரின் அறிவுரை நினைவிற்கு வந்தது. 'அட, என் கையில்தான் தீர்வாக தடி இருக்கிறதே' என்று நினைத்து கொண்டு தடியை ஓநாய் மீது வீச அது ஓடி விட்டது. 'தடியே இறைவன்! அய்யா, இனி பயப்படாமல் உங்கள் வழியே செல்லுங்கள்' என்று தான் அடையாளம் கண்டு கொள்ளாத இறைவனிடம் கூறிவிட்டு மனிதன் தன் வழியே நடக்கத் தொடங்கினான். இறைவன் திகைத்து நின்றான்.

கையில் கிடைப்பதெல்லாம் கடவுள்தான் என்று செயல்பட வேண்டுமா அல்லது நிச்சயம் இறைவன் நேரடியாக வருவான் என்று நம்பிக்கையோடு காத்திருக்க வேண்டுமா? விக்கிரமாதித்தனுக்கு வேதாளம் விடுத்த புதிர் போல இக்கேள்வி என்னுள் தோன்றியது. ஆனால் விடைதான் கிடைக்காமல் இருந்தது.

மன்னாதி மன்னனான விக்கிரமாதித்த பூபதியிடம் ஓர் இளவரசி தூதனுப்பினாள். 'நீர் சகல கலைகளும் அறிந்தவர் என்றும், நுண்மதி படைத்தவர் என்றும் கேள்விப்படுகிறேன். நான் உடல் முழுவதும் திரையிட்டு மின்னலைப் போல சுழன்று நடனமாடுவேன். என்னைச் சித்திரமாக வரைய முடியுமா? நீர் வென்றால் பேரழகியான நான் உமக்கு மாலையிடுவேன்! சித்திரத்தில் சிறு தவறு இருந்தாலும் நீர் எனக்கு அடிமையாக வேண்டும்' என்றாள்.

'நீ தாராளமாக தலை முதல் பாதம் வரை திரையிட்டு மறைத்துக் கொள். ஆனால் போட்டி துவங்கும் முன் உன் இடப்பாத பெருவிரலை ஒரே ஒரு முறை தொட்டு வணங்க விரும்புகிறேன்' என்றான் விக்கிரமாதித்தன். 'பெண்ணின் பாதத்தை வணங்குவதை விட ஆணுக்கு வேறு பெரிய பெருமையும், இன்பமும் இல்லை என நினைக்கிறார் போலிருக்கிறது' என்று பூரித்த இளவரசியும் பெருவிரல் தரிசனம் தந்து பின் நடனமாட ஆரம்பித்தாள்.

மோகினி உருவெடுத்த மகாவிஷ்ணு ஆடியது போல வேகமாக ஆடினாள் இளவரசி. அவையினர் கண்ணுக்கு ஓர் ஒளிவட்டம் சுழல்வது போலிருந்ததே தவிர வேறெதுவும் தெரியவில்லை. ஆனால் விக்கிரமாதித்தன் வேற்று மனிதர்கள் எவருமே பார்த்திராத, திரையிட்ட இளவரசியின் உருவத்தை திரையின்றி அசலாக வரைந்திருந்தான்.

'இது எப்படி சாத்தியம்?' என்று வியந்தபடி மாலையிட்ட இளவரசியிடம், 'மரத்தின் சாரம் விதைக்குள் இருக்கிறது. முழுமையின் சாரம் பகுதியில் இருக்கிறது. பிரபஞ்சத்தின் சாரம் புள்ளியில் இருக்கிறது. அளவின்மையின் சாரம் அளவிற்குள் இருக்கிறது. சமூகத்தின் சாரம் குடும்பத்தில் இருக்கிறது. சாரத்தை அறிந்தவன் முழுமையை அறிந்து சாதிக்கப் பிறந்தவன். பாதவிரலைப் போற்றுகிறவன் பெண்ணை



அறிகிறான். பெண்ணைப் போற்றுகிறவன் பெண்மையை அறிகிறான். பெண்மையைப் போற்றுகிறவன் பிரம்மத்தை அடைகிறான். பாரதக் கலைகள் எல்லாமே ஆன்மிக நூல்களில் பிறந்த ஞானப் பூக்கள்' என்றான் விக்கிரமாதித்தன்.

'ஆச்சரியமாக இருக்கிறதே, அதெப்படி முடியும்?' என்று சிறு வயதில் என் பாட்டியிடம் கேட்டேன்.

'விக்கிரமாதித்தன் வேதாளத்தின் உதவியோடு இளவரசியை ஏமாற்றியிருப்பான். உன் தாத்தாவைப்போல அப்பாவிப் பெண்ணை ஏமாற்றுவதுதான் எல்லா ஆண்களும் செய்வது' என்று என் பாட்டி கொடுத்த அனுபவ விளக்கம் என் தர்க்க தாகத்தை தற்காலிகமாகத் தீர்த்தது.

மூலத்திலிருந்து வெளிப்படும் பெருநிகழ்வுகளை காலத்திலும், வெளியிலும் எதிர்கொள்ளும் மனிதன் அந்த அனுபவங்களின் சாரத்தைத் தன்னுள் பெறுகிறான். பெற்ற சாரத்தை தலைமுறை தலைமுறையாக தன் சந்ததியினருக்குத் தருகிறான். சாரத்தை அறிந்தவன் அதன் விளக்கமான அனுபவங்களையும், அனுபவங்களைத் தரும் நிகழ்வுகளையும், இறுதியாக மூலத்தையும் கால, வெளி அலைச்சலின்றி அடைகிறான்.

மூலமான பிரம்மம் ஆனந்த அனுபவம் பெற, அளவற்ற தன்னை அளவிற்குட்படுத்தி, அனைத்தும் அறிந்த தன்னை அறியாமைக்கு ஆளாக்கி, எங்குமிருக்கும் தன்னை தனக்குள் இழந்து தன்னை மறந்தது. கணக்கிடமுடியாத காலந்தொட்டு விரிந்து கொண்டேயிருக்கும் வெளியெங்கும் பிரம்மத்தின் பிரதிநிதியாக ஆன்மா சைத்திய புருஷன் என்ற பெயரில் வளர்ந்து வருகிறது. எண்ணற்ற உருவங்கள் வழியாக, பற்பல பிறவிகள் வழியாக தான் பெறும் அனுபவங்களின் சாரத்தைச் சேகரிக்கிறது. தனக்குள் இருக்கும் சைத்திய புருஷனைக் கண்டறிபவன், பரிணாமச் சாரத்தை அறிகிறான். கால,வெளித் தடைகளின்றி படைப்பின் அத்தனை ரகசியங்களையும், அனைத்துப் பிறவிகளில் பெற்ற அனுபவங்களையும் அறிகிறான். பிரம்ம மூலத்தையும் அறிகிறான். வாசிக்க நன்றாக இருந்தாலும், மறைநூல்கள் சொல்வதை மனம் எளிதில் ஏற்றுக் கொண்டு விடுமா?

அறிவியல் ஆராய்ச்சி கூடத்தில் அமர்ந்து கொண்டு அமெரிக்க விஞ்ஞானி ஆங்கிலத்தில், 'மரபணுக்கள் மூலம் மனிதனை முழுவதுமாக அறிய முடியும்' என்று கூறினால்தான் மனம் நம்புகிறது. நம் வீட்டுப் பிள்ளைகளும், பிடிக்கிறதோ, இல்லையோ, மரபணுப் படிப்பில் பட்டம் பெற்று வெளிநாட்டில் வேலை பார்க்க வேண்டும் என்று மனம் ஆசைப்படுகிறது.

விஞ்ஞானி தனக்குரிய சோதனைச்சாலை சாதனங்களைக் கொண்டு சில அறிவியல் உண்மைகளை அறிகிறார். யோகி தனக்குரிய ஆன்மிக சாதனங்களைக் கொண்டு தானறிந்த உண்மைகளைக் கூறுகிறார். அவர் கருவியைக் கொண்டு இவர் முடிவுகளை மதிப்பிடுவதுவும், இவர் கருவியைக் கொண்டு அவர் முடிவுகளை மதிப்பிடுவதுவும் சரியான செயலாக இருக்க முடியாது. ஆனால் அப்படித்தான் இருவருமே சச்சரவு செய்து கொண்டிருக்கிறார்கள். தறியில் சேலை நெய்பவனைப் பார்த்து, 'அடுப்பில் சமைக்காத சேலை நன்றாக இருக்காது' என்று சமையல்காரன் கேலியாகச் சிரித்தானாம். அதற்கு நெசவாளி 'தறியில் செய்யாத இடியாப்பம் எப்படிச் சுவையாக இருக்க முடியும்?' என்று பதிலுக்கு சிரித்தானாம்.

நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு பொருளும், எத்தனையோ ஆயிரம் வருடங்களாகப் படிப்படியாக பரிணாம வளர்ச்சி பெற்று இன்று நமக்குப் பயன்படுகின்றன. ஒரு வார்த்தை என்பது பல்லாயிர வருடப் பண்பாட்டின், வரலாற்றின் ஒரு பகுதியின் சாரம். ஒரு வார்த்தையைக் கொண்டு ஒரு மனித இனக்குழுவின் முக்கிய அம்சங்களை அறிய முடியும் என்று மொழியறிஞர்கள் கூறுகிறார்கள்.

பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னால், மகாபாரதம் நிகழ்வதற்கும் முன்னால் இருந்த சிந்து சமவெளி நாகரிகத்தை அறிய, மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் கிடைத்த உடைந்த பானைகள் உதவியாக இருக்கின்றன. அப்பானைகள் அவர்கள் வாழ்க்கை முறையை, சமைத்த விதத்தை, வாழ்ந்த விதத்தை சாரமாக நமக்குச் சொல்கின்றன. அங்குக் கிடைத்த பொருட்களில் இருக்கும் சித்திரப்பெண்கள் சேலை போன்ற உடையணிந்திருக்கிறார்கள். சேலை பல்லாயிர வருடப் பண்பாட்டின் பகுதியின் சாரம்.



மகாபாரதத்தை எத்தனை ஆயிரம் வருடங்களாக நாம் பயின்று வருகிறோம். அதில் சேலையின் பங்கைப் பற்றி என்றாவது எண்ணியிருக்கிறோமா? திரௌபதி ஒற்றை வஸ்திரமாக சேலை கட்டியிருந்த காரணத்தால்தானே துச்சாதனனால் துகிலுரிய முடிந்தது? கண்ணனும் தொடர்ச்சியாக சேலை தந்து, பெண்கள் போற்றும் தெய்வமாக தன்னைக் காட்டிக் கொள்ள முடிந்தது? திரௌபதி சல்வார் கமீசோ, சுரிதாரோ போட்டிருந்தால் துச்சாதனனும், கண்ணனும் என்ன செய்திருப்பார்கள்? மகாபாரதப் போர் கூட நிகழாதிருந்திருக்கக் கூடும்.

பெண்ணின் மானத்தை மட்டுமல்ல, ஆணின் மானத்தையும் சேலை காப்பாற்றியிருக்கிறது. சனீஸ்வரனின் சதியால் நளன் ஆடையிழந்த போது, தமயந்தி தன் சேலையை இரண்டாகக் கிழித்து ஒரு பாதியை கணவனுக்குத் தந்தாளே!

சேலையின் பயன்பாடுகள் பற்பல.

என் பாட்டி தின்பண்டங்களைச் சேலை மடிப்பில் முடிந்து வைத்திருப்பார். அவை தீரும்வரை அவர் பின்னால் அலைந்து கொண்டிருப்பது என் சிறுவயதுப் பழக்கம். அவரது இடுப்பில் இருக்கும் பணமும் சில்லறையும் நிரம்பிய சுருக்குப்பைமீது எப்போதும் என் தாத்தாவிற்கு ஒரு கண்ணுண்டு. சாவிக் கொத்தைப் பத்திரமாகச் செருகி வைத்து வீட்டிற்கு யார் எஜமானி என்பதை அனைவருக்கும் அறிவிக்க, சேலையைவிடச் சிறந்த உடை எதுவுமில்லை. கைக் கழுவியபின் துடைக்கத் துண்டெதற்கு? முந்தானை போதாதா?

சம்பளமில்லாத வேலைக்காரியாக, சம்பாதித்துத் தரும் அடிமையாக, ஆசையெழும்போது விளையாடத் தேவைப்படும் பொம்மையாக, குழந்தைகளை வளர்க்க உதவும் ஆயாவாக, சுயசிந்தனைகளோ, நுண்ணுணர்ச்சிகளோ இருக்கக்கூடாத ஜடமாக மனைவியரை நடத்தும் இந்தியக் கணவர்களால் உண்டாகும் அளவற்ற கண்ணீரைத் துடைக்கச் சேலை போன்ற பெரிய துணிதான் பொருத்தமாக இருக்கும். கைக்குட்டை போதாது.

நகரங்களில் நீரை வீணடிக்கிறோம். ஒரு குடம் நீருக்காக பல மைல் நடக்கும் பாரத கிராமத்துப் பெண்களின் பாரத்தை குடந்தாங்கும் சேலைத்தலைப்புதானே அறியும்? குடம்

சுமக்கும் அவர்களது இடைக்கும், தலைக்கும் சேலையே சற்று ஆறுதல் தருகிறது. எரிக்கும் வெயிலில் இருந்தும், எதிர்பாரா மழையில் இருந்தும் அப்பெண்களின் தலையைக் காப்பதில் சேலைத் தலைப்பிற்கு நிகர் எதுவுமே இல்லை. எந்த மண்தரையிலும் சேலைத் தலைப்பைச் சிறு விரிப்பாக்கி தூங்கி விடலாம். சற்றே சுருட்டினால் தலையணை தயார்.

சேலையைக் கையில் தந்து விட்டால், அம்மா கூடவே இருப்பதாக நினைத்துக் கொண்டு குழந்தை தூங்கி விடும். குழந்தைக்கு பிடித்தமான தொட்டிலாகச் சேலையை நிமிடத்தில் மாற்றி விட முடியும்.

சேலையில் இருக்கும் தங்கச் சரிகை அல்லது வெள்ளிச் சரிகையின் அகலத்தின் மூலம் சமூக அந்தஸ்தைக் காட்ட முடியும். தவிர அது பண நெருக்கடி ஏற்படும்போது அடகு வைக்கவும், நல்ல விலைக்கு விற்கவும் பயன்படும்.

பக்தன் தன்னைப் பல ரூபங்களில் இறைவனுக்கு அர்ப்பணிப்பது தாந்திரீக யோகமுறைகளில் ஒன்று. பெண்ணாகத் தன்னைப் பாவித்து இறைவனைக் காதலிக்கும் ஆண் பக்தன் அகஎழுச்சியில் சேலையும், நகைகளும், அணிந்தால் அதை மனப் பிறழ்வு என்று பகுத்தறிவுப் பாமரர்கள் எள்ளி நகையாடுவதுண்டு.

சேலையை அறுபத்தி நான்கு பாணிகளில் அணிய முடியுமாம். பன்னிரெண்டு பாணிகளில் பெண்கள் சேலை கட்டி நான் பார்த்திருக்கிறேன்.

பிராமண குடும்பத்தில் மடிசார் கட்டுகிறார்கள். எட்டு அல்லது ஒன்பது கஜம், கிட்டத்தட்ட இருபத்தியேழு அடி நீளம் இருந்தால்தான் பாந்தமாக மடிசார் கட்ட முடியும். நீளமான சேலை கனக்கிறது என்று நீளம் குறைவான சேலையிலும் சிலர் மடிசார் அணிகிறார்கள்.

'பல்லு' என்கிற முந்தியை இடப்பக்கம் விடுவது தென்னகப் பாணி என்றால், வலப்பக்கம் விடுவது குஜராத்திப் பாணி.

திருவிடைத் தமிழ்ப் பாணியில் நான்கு கொசுவ மடிப்புகள் எடுத்து முன்புறமாக வயிற்றுப் பகுதியில் செருகிக் கொள்ள வேண்டும். எந்தப் பெண்ணாவது கச்சிதமாகக் கொசுவ மடிப்புகள் வைத்திருந்தால், சேலை கட்டும்போது கணவன் அவளது காலடியில் அமர்ந்து, மடிப்புகளை ஒவ்வொன்றாகப்



பிடித்து, நீவி விட்டுச் சரி செய்திருக்கிறான் என்று உத்தரவாதமாகச் சொல்லலாம். இந்தக் கொசுவ மடிப்புகளை பின்புறமாக செருகிக் கொண்டு, சேலையை மார்பின் மீதிருந்து கால்வரை அணிந்து கொண்டால் குடகு பாணி ஆகிவிடுகிறது. இப்பாணியில் சேலை கட்டும் கன்னடத்துப் பெண்கள் எப்படித்தான் பின்பக்கமாக மடிப்பு எடுக்கிறார்களோ!

நேரியல், முண்டு என்று சேலையை இரண்டு துணிகளாக அணிவது மலையாள பாணி. நடக்கும்போது கால்கள் தட்டாமல் இருக்க, கால்களின் நடுவே மடிப்பை செலுத்தி, கால்சட்டை போல சேலையை மாற்றுவது வேளாண்மைத் தெலுங்கரின் பாணி.

இந்தியத் திருநாட்டுப் பேரழகியரிடையே இப்போதெல்லாம் நிவி பாணிதான் மிகவும் பிரபலமாக இருக்கிறது. அதை சரியானபடி பின்பற்றினால் மயில் தோகை விரித்தது போலிருக்கும். சற்று தவறினாலும், பாம்பு படமெடுத்தது போலாகி விடும்.

மனைவியை ஆராதிக்கும் கணவனை 'முந்தானையைப் பிடித்தபடி அலைகிறான்' என்றும், கணவனுக்கு நல்வழி காட்டி நடத்திச் செல்லும் பெண்ணை 'முந்தானையில் முடிந்து விட்டாள்' என்றும் இடித்துக் கூறுவது தமிழரின் பழம்பண்பாடு. முந்தானை முடிச்சு, முந்தானை பிடிப்பு, முந்தானை விரிப்பு போன்ற சொலவடைகளால் முந்தானையை பிரபலமாக்கிய தமிழ் கூறும் நல்லுலகம் ஏன் கொசுவத்திற்கு ஒரு பெருமையும் தரவில்லை?

வீரமற்ற ஆண்களைப் பார்த்து 'சேலை அணிந்து கொள்' என்று பிறர் இடித்துரைப்பது உண்டு. வீரமுள்ள பெண்களைப் பார்த்து ஏன் எவரும் 'வேட்டி அணிந்து கொள்' என்று சொல்வதில்லை?

சிக்கலே சிந்தனைக்கும் சாதனைக்கும் பிறப்பிடம். பல பெண்களுக்குக் கச்சிதமாக சேலை அணியத் தெரியவில்லை என்பது ஒரு சிக்கல். அதைத் தீர்க்கும் விதமாக முந்தி, இடக்கால், வலக்கால், கொசுவம் என்று பல பகுதிகள் கொண்ட சேலை சில கடைகளில் கிடைக்கின்றது. பகுதிகளைத் தனித்தனியாக அணிந்து கொண்டு மறைவாக இருக்கும் பித்தான்கள் மூலம் அவற்றை ஒருங்கிணைத்து விடலாம்.

ஒற்றைச் சேலை போலத் தோன்ற வைத்து, பகுதிகளே முழுமை என்று நம்பும்படியான புலன் மயக்கத்தைப் பிறருக்குத் தந்து விட முடியும். பல மடங்கு விலை கொடுத்து வெளி நாட்டில் வாழும் இந்தியர் இதை வாங்குவதாக வியாபாரி ஒருவர் ரூபாய் நோட்டுக்கற்றைகளை அடுக்கிக் கொண்டே கூறினார்.

பல வடநாட்டுக் குடும்பங்களில் பிறந்த வீட்டில் பெண்கள் பலவித உடைகளை எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் அணியலாம். ஆனால் புகுந்த வீட்டில் சேலை மட்டும்தான் அணிய முடியும். கல்யாணமான பெண்கள் பெரியவர்களைப் பார்க்கும்போது முந்தியால் முக்காடிட்டுக் கொள்ள வேண்டும். வண்ணங்களே வாழ்வு என்பதை வடநாட்டினர், குறிப்பாக ராஜஸ்தானியர் அறிந்தது போல தென்னாட்டினர் அறிய-வில்லை. திகைக்க வைக்கும் பிரகாசமான வண்ணங்கள் கொண்ட ராஜஸ்தானிய சேலைகள் கலைஞனை பரவசப்-படுத்துபவை.

முன்பெல்லாம் இன்ன சாதியினர் இன்ன வகையில் சேலை அணிய வேண்டும் என்று சமூகச் சட்டமே இருந்தது. உலகப் புகழ்பெற்ற தமிழகப் பாடகி ஒருவர் மடிசாரோடு பாரம்பரியப் பெருமையுள்ள ஒரு மடத்திற்குள் நுழைய அனுமதி கிடைக்கவில்லை. சில வருஷங்கள் கழித்து அவரது இனிய சாரீரமும், தூய பக்தியும், மடாதிபதியின் மனதை மாற்றின.

கச்சையும், சேலையும் அணிவதுதான் இங்கே வெகுகால வழக்கம். இஸ்லாமியர் இந்தியாவை ஆளவந்த பின் சல்வார் கமீஸ் மோகம் பரவியது. ஆங்கிலேயர் ஆட்சியில் விக்டோரியா மகாராணியின் விருப்பப்படி இந்தியரின் கலாசாரமும், ஒழுக்க விதிகளும், மாற்றப்பட்டன. உள்ளாடையும், பாவாடையும், ரவிக்கையும் அப்போது வந்தவை.

சிறுவர்கள் முழு ஆண்களாக மாறும்வரை, கால்சட்டையில் பாதியான அரைக்கால் சட்டையை அணிகிறார்கள். சிறுமிகள் முழு பெண்களாக மாறும்வரை, சேலையில் பாதியான தாவணியை அணிகிறார்கள்.

சாதாரண இடத்துப் பெண்கள் பகட்டான பட்டுச்-சேலையோடு, ஏராளமான நகைகளை அணிந்து கூட்டத்தின் கவனத்தைப் பெறுகிறார்கள். பெரிய இடத்துப் பெண்கள் அலங்காரமற்ற பருத்திப் புடவையும், எளிய நகைகளையும்



அணிந்து வந்து தங்கள் பெருமையை வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்.

பொதுவாக எல்லாவிதமான நகைகளையும் சேலையோடு பொருத்திவிட முடியும். மற்ற உடைகளோடு அப்படி எளிதாக பொருத்திவிட முடியாது. அப்புறம் இருக்கவே இருக்கின்றன பூக்கள். சேலையோடு மட்டும்தான் பூச்சரங்கள் அழகாக ஒத்துப் போகின்றன. கொலுசின் நிலையும் அதுவே.

நான் பிறந்த ஊரில் பெரும்பாலான பெண்கள் கிழிந்த சேலை அணிந்து கொண்டு, வீட்டுவேலை செய்வதோடு பட்டுச் சேலை நெய்து கொண்டிருப்பார்கள். ஆண்கள் திண்ணையில் உட்கார்ந்து சீட்டாடிக் கொண்டு அரசியல் பேசுவார்கள். எல்லா வீடுகளிலும் ஒரு தறியாவது ஓடிக் கொண்டே இருக்கும். தட்தட்டென்று அது இயங்கும் ஓசை கேட்டுக் கொண்டே இருக்கும். சிறுவனாக இருக்கும்போது தறியை இயக்கப் பார்த்து, முடியாமல் பெண்களின் நகைப்பிற்கு ஆளாகி இருக்கிறேன். ஒவ்வொரு குடும்பத்திலும் குறைந்தது ஒருவராவது படித்து அமெரிக்கா சென்று விட்டபின் ஊரின் நிலைமை இப்போது முற்றிலும் மாறி விட்டது. படிப்பாலும், படிப்பு தந்த பணத்தாலும், கிழிசலும், வறுமையும் மறைந்து விட்டன. யாரும் கூலிக்குத் தறி அடிப்பதில்லை.

இக்காலப் பெண்களுக்கு கால்சட்டையும், சுரிதாரும்தான் வசதியாக இருக்கின்றன. வண்டி ஓட்டும்போது சேலை பறக்குமே என அஞ்ச வேண்டியதில்லை. ஆண்களோடு பேசும்போது நிமிடத்திற்கொரு முறை முந்தியை இழுத்துவிட்டு சரி செய்யும் அவஸ்தை தேவையில்லை. சேலையை மடித்து வைப்பதிலும், இஸ்திரி போடுவதிலும் நேரம் விரயமாகிறது. ஒரே ஒரு நல்ல சேலை எடுக்கும் பணத்தில் நாலைந்து நல்ல சுரிதார்கள் எடுத்து விடலாம். அதனால் பெண்கள் சேலை அணிவது வெகுவாகக் குறைந்து வருகிறது.

சேலை இன்னமும் இந்தியரின் ஆழ்மனதில் ஒரு புனிதமான மங்கலக் குறியீடாகத்தான் இருக்கிறது. இன்றுவரை தாலி கட்டும்போது மணப்பெண்ணிற்கு சேலைதான் அணிவிக்கப்-படுகிறது. ஜீன்ஸ் அணிந்து தாலி கட்டிக் கொண்டவர்களை நான் இன்னமும் சந்திக்கவில்லை. எல்லா அம்மன் கோவில்களிலும் தேவியருக்கு சேலைதான் உடுத்தி

விடுகிறார்கள். மதுரை சொக்கநாதர் அருகே மீனாட்சி அம்மன் கால்சட்டை அணிந்து நிற்பது போல என்னால் விளையாட்டாகக் கூட கற்பனை செய்ய முடியாது. ஆழ்மனக் குறியீடுகள், பிம்பங்கள், பதிவுகள் அந்த அளவிற்கு வலிமையோடு இருக்கின்றன.

இந்தியப் பெண்கள் மேல்நாட்டு உடையணிந்தால் பொருட்படுத்தாத நாம், வெளிநாட்டினர் சேலை அணிந்தால் வேடிக்கைப் பார்க்கிறோம். கூடவே அவர்கள் பொட்டும், பூவும் வைத்துக் கொண்டார்கள் என்றால் நம் கலாச்சாரத்திற்குப் பெருமையும் அங்கீகாரமும் கிடைத்து விட்டதாக எண்ணி அர்த்தமற்ற பெருமிதம் கொள்கிறோம்.

புகழ் பெற்ற ஓவியரான ராஜா ரவிவர்மாவின் படங்களில் உள்ள பெண் தெய்வங்களும், புராண மங்கையரும் பல பாணிகளில் சேலை அணிந்திருப்பார்கள். நான் ஓவியப் பள்ளியில் சேர்வதற்கு முன்புவரை, அவரது ஓவியங்ளையே அற்புதமானவை என்றும், இந்திய ஓவிய சாதனையின் சிகரம் என்றும் தவறாக நினைத்துக் கொண்டிருந்தேன். அது எத்தனை அபத்தமான கருத்து என்பது சில காலம் ஓவியம் பயின்றபின், இந்தியக் கலைகள் பற்றிய சுவாமி விவேகானந்தா, ஸ்ரீ அரபிந்தோ ஆகியோரது கருத்துகளை அறிந்தபின், புரிந்தது. ரவிவர்மா தன் ஓவியப் பெண்களுக்குச் சேலையும், இந்திய நகைகளும் அணிவித்தாலும், ஓவியங்களை காலாவதியாகிவிட்ட ஐரோப்பிய, பார்ஸி பாணியில் மட்டுமே வரைந்தார். அதுவும் தகவல் பிழைகளோடு! ‘ஐரோப்பியர் கழற்றி எறிந்துவிட்ட நைந்த மேலங்கியை அணிந்து கொண்டிருக்கிறார் ரவிவர்மா’ என்கிறார் ஸ்ரீ அரபிந்தோ.

அதன்பின், பொதுமக்களின் கருத்துகளை ஏற்காமல், ஸ்ரீ அரபிந்தோ போன்றவர்களின் பல்கோண கருத்துகளை வாசித்து, சொந்தமாகவும் சிந்தித்து எனது கருத்துகளை உருவாக்கிக் கொள்ள எனக்கு நானே பயிற்சி தந்து கொண்டேன். சொந்தமாகச் சிந்திக்கக் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் கற்றுத் தருவதில்லையே! இந்த வகையில் சுயசிந்தனை உருவாக்கிக் கொள்ளும் முறையை கற்றுத் தந்ததில் சேலைக்கும் ஒரு பங்குண்டு.



சேலையைப் பற்றி இந்த அளவிற்கு நான் யோசிக்கக் காரணம் காலையில் திருமண அழைப்பிதழ் தந்த நித்யாதான். வசதியும், வருமானமும் மிகக் குறைவாயிருந்த குடும்பத்தில் பிறந்தவள் நித்யா. ஆனால் பார்ப்பதற்கு, ஓவியங்களில் நான் ரசித்த ராஜபுதனத்து ராஜகுமாரி போலிருப்பாள்.

ஒரு சிலர் செல்வந்தர்களாக இருந்தாலும், விலையுயர்ந்த ஆடைகள் அணிந்த கூலி வேலை செய்பவர்கள் போலிருப்பார்கள். வேறு சிலர், ஒரு வசதியுமில்லை என்றாலும். எளிய உடை அணிந்த இளவரசிகள் போலிருப்பார்கள். நித்யா இரண்டாவது ரகம். நான் குறிப்பிடுவது தோற்றத்தைப் பற்றி மட்டுமல்ல. பேசும்விதம், உபயோகிக்கும் வார்த்தைகள், நடத்தை என எல்லாவற்றையும் கணக்கிலெடுத்துக் கொண்டுதான் சொல்கிறேன்.

நித்யா ஏதோ ஒரு பெண்கள் கல்லூரியில் இலக்கியம் படித்தாள். வசதியற்ற குடும்பத்தில் பிறந்து இலக்கிய பட்டப்படிப்பு படித்தால் எதிர்காலம் இருண்டு விடும் என்று தமிழ் சமுதாயம் நம்புவதால், அவளும் தட்டச்சு படித்தாள். நான் பயிற்சி எடுத்து வந்த ஆடிட்டர் அலுவலகத்தில் அவள் நம்பிக்கைக்கேற்ப தட்டச்சு வேலை கிடைத்து அதை கவனமாகச் செய்து வருகிறாள்.

மிக மிக சாதாரணமான நான்கைந்து சேலைகள்தான் அவளிடமிருந்தன. ஆங்காங்கே வண்ணம் வெளிறியவை, சாயம் போனவை. திரும்பத் திரும்ப அவற்றைத்தான் அணிந்து வருவாள். விசேஷங்களுக்கும் விதிவிலக்கில்லை. எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

ஆடிட்டரிடம் ‘நித்யா மிக நன்றாக வேலை பார்க்கிறாள். சம்பளத்தை சற்று உயர்த்தித் தரலாம்’ என்றேன்.

‘ஏன், உனக்கு சம்பளம் கூட வேண்டுமாக்கும்?’ என்று கேலியாகக் கேட்டார் சார்.

‘அவள் குடும்பச் சூழ்நிலை உங்களுக்குத் தெரியும். ஊக்கத்தொகை போல ஏதாவது தந்தால், நல்ல உடைகள் வாங்கிக் கொள்வாள்’ என்றேன்.

‘தன் தம்பிக்கும், தங்கைக்கும்தான் வாங்குவாள். தனக்கு வாங்க மாட்டாள். நீ சொல்வது சரிவராது. என்னால் வேலைக்குத்தான் சம்பளம் தர முடியும். அவள் கஷ்டத்தைத்

தீர்ப்பது என் கடமையில்லை' என்று எந்த உதவியும் செய்ய மறுத்து விட்டார் ஆடிட்டர்.

என் செலவில் வாங்கித் தர நினைத்தாலும், அதைச் செய்யவில்லை. அது சிறுமைபடுத்தப்பட்ட உணர்வைத் தந்து அவள் மனதைப் புண்படுத்தலாம். அல்லது என் நோக்கம் தவறானதாகப் பிறரால் திரிக்கப்படலாம். பெண்களோடு வேலை பார்க்கும்போது ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகப் பயன்படுத்தாவிட்டால் பிரச்சனைகள் உருவாகி விடக் கூடும். உதவி செய்யக் கூட எவ்வளவு யோசிக்க வேண்டியிருக்கிறது! 'உதவவேண்டும் என்ற மனப்பான்மை இருந்தால் போதும், உதவவேண்டிய அவசியமில்லை' என்று என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன்.

பேசாமலிருந்தால் 'ஆணாதிக்க அகம்பாவம் பிடித்தவன்' என்ற பெயர் கிடைக்கும். நிறைய பேசினால் 'பெண்ணை பார்த்ததும் புத்தி மயங்குபவன்' என்ற பெயர் கிடைக்கும். கண்டிப்புடன் வேலை வாங்கினால் 'வேண்டுமென்றே கஷ்டம் தருகிறான்' என்ற கண்ணீரை காண நேரும். முடிந்தவரை உதவலாம் என்று முயன்றால் 'எல்லா வேலைகளையும் நீங்களே செய்து தந்தால் தேவலை' என்ற வேண்டுகோள் வரும். கடுமையான வார்த்தைகளை சொல்லிவிட்டால் 'பெண்ணைப் புரிந்து கொள்ளாத கிராதகன்' என்ற பட்டமும், அன்பான வார்த்தைகளை சொல்லிவிட்டால் 'பெண்ணிடம் முறை தவறி நடப்பவன்' என்ற பட்டமும் கிடைக்கும். ஆணும், பெண்ணும் சேர்ந்து வேலை பார்க்கும் இடங்களில் எப்படி பழகுவது என்பது எனக்கு இன்னமும் பிடிபடாத ரகசியமாகவே இருக்கிறது, எதிலும் அளவோடு இருக்க வேண்டும் என்று தோன்றினாலும் ஆளுக்காள் அளவு வேறுபடுவதால் எது சரியான அளவு என்பது புரிவதில்லை. சரியான அளவு என்ற ஒன்று மனித சுபாவத்தில் இருக்கிறதா என்ன?

புறம் அகத்தை பிரதிபலிக்கும் ஆடி என்பதை ஏற்றால், எந்த உறவில் சிக்கல் வந்தாலும் அது அகத்தில் உள்ள திரிபு என்பதையும் ஏற்றுத்தான் ஆக வேண்டும். நான் ஒருவரிடம் சரியாகப் பழகவில்லை என்ற புகாருக்கு ஆளானால், 'புகார் செய்பவர் பொய் சொல்கிறார். என்னை அவர் புரிந்து கொள்ளவில்லை. என் நல்லெண்ணத்தை ஏற்கும் திறனற்றவர்.



அகந்தையுள்ளவர். தீய சக்தி, என்னை குறை சொல்லியதற்காக தண்டனைக்கு ஆளாவார்' என்று கூறி புகார் கூறியவரை சிறுமைப்படுத்தவே பொதுவாக மனித மனம் விழைகிறது. என் மீது எழும் எத்தகைய கடுமையான குற்றச்சாட்டுக்கும் உரிய காரணம் தெளிவாகவோ, மறைவாகவோ, வித்தாகவோ என்னிடம் இருக்கிறது என்பதை ஏற்றால் மட்டுமே சமர்ப்பணம் சிறிதேனும் முன்னகர்கிறது, சில எழுத்தாளர்கள் தாங்கள் எழுதிய நூல்களின் முன்னுரையில், 'என் நூலில் உயர்ந்தவை இருப்பின் அதன் பெருமை என் குருவையும், இறைவனையும் சேரும். பிழைகளுக்கு மட்டுமே நான் பொறுப்பு' என்று எழுதுவதுண்டு. நூல்களுக்கு மட்டுமன்றி வாழ்வில் ஒவ்வொரு சிறிய, பெரிய நிகழ்ச்சிக்கும் இந்த மனப்பான்மை பொருந்தி வரக் கூடியது, எனக்கு நடக்கும் எல்லா தீமைக்கும், நன்மைக்கும் நான் மட்டுமே காரணம், பிறரில்லை என்பதே இறுதி உண்மை என்றாலும், நடைமுறையில் அடக்கம் வளர இந்த மனப்பான்மை உதவுகிறது. நான் ஒரு நண்பரின் வீட்டிற்கு செல்கிறேன். அவருக்கு அதன்பின் நல்லது நடந்தால் என் தொடர்பால் அவருக்கு நல்லது நடந்தது என்று சொல்கிறேன். ஆனால் நான் வாழுமிடத்தில் அன்றாடம் நடக்கும் தகாத செயல்கள், என் குடும்பத்தில் நிகழும் தவறுகள் எல்லாமே என்னால்தான் நிகழ்கின்றன என்பதை ஏற்காவிட்டால் நான் ஆன்மிக வழியில் செல்பவன் என்று என்னைப் பற்றி சொல்லிக் கொள்ள முடியுமா?

ஸ்ரீ அரபிந்தோவை படித்து நடப்பதெல்லாம் எனக்குத் தேவையான, அகம் விரும்பும் அனுபவமே என்ற அறிதல் வந்தபின், விஷம் கலந்த விமர்சனங்களிலிருந்தும், அமுதம் கலந்த பாராட்டுகளிலிருந்தும் விலகி நின்று புன்னகைக்கும் பக்குவம் வந்திருக்கிறது, சமர்ப்பணம் செய்துபின் பழக ஆரம்பித்தால், மேன்மக்கள் தங்களை தாழ்த்திக் கொண்டு என்னை பிரியத்துடன் நெருங்குவதும், அர்த்தமற்றவர்கள் தங்களை உயர்வாக நினைத்துக் கொண்டு சச்சரவு செய்து தாமாக விலகிப் போவதும் நடக்கிறது.

உதவி செய்பவரிடமும், உதவி பெறுபவரிடமும் பரஸ்பரம் நல்லெண்ணமும், அகந்தையால் கறைபடாத அன்பும் இருந்தால் மட்டுமே உதவியால் பிரச்சனை உண்டாவதில்லை.

அப்படி இல்லையென்றால், உதவி பெறுபவர் தவறாமல் உதவியவரை தாக்கி இழிவுபடுத்துவார். அத்தாக்குதலை ஏற்கத் தயாராக இருந்தால் மட்டுமே அடுத்தவருக்கு உதவத் துணியலாம். ஆனால் நித்யாவிற்கு என்மீது நல்லெண்ணம் மட்டுமே இருந்ததால், அவளுக்கு நான் உதவியபோதெல்லாம், இருவருக்குமே நன்மைகள்தான் கிடைத்தன.

ஒரு முறை மாதக் கடைசியில் 'சந்துரு, சில்லறை இருக்குமா? பஸ்ஸிற்காக கேட்கிறேன்' என்றாள் நித்யா.

'எப்போதும் சில்லறையோடு இருக்க நானென்ன நடமாடும் பலசரக்குக் கடையா? எவ்வளவுக்கு சில்லறை வேண்டும்? நூறுக்கா, ஐநூறுக்கா? எதிர்கடையில் மாற்றித் தருகிறேன்' என்று கை நீட்டினேன்.

'என்னிடம் ஒரு ரூபாய் கூட இல்லை' என்றாள். அப்போதுதான் அவள் ஏன் சில்லறை கேட்டாள் என்பது புரிந்தது. பெண்கள் கூறுவதை நான் எப்போதும் தாமதமாகத்தான் புரிந்து கொள்வேன்.

என் பையில் இருந்த நூறு ரூபாயை எடுத்துத் தந்தேன். 'போதுமா? இப்போது என்னிடம் இதுதான் இருக்கிறது. இன்னும் தேவை என்றால் தயங்காமல் கேள். யாரிடமாவது வாங்கித் தருகிறேன்' என்றேன்.

'உன்னிடம் கேட்கவோ, வாங்கவோ எனக்கென்ன தயக்கம்? இது போதும். நாளைக்குச் சம்பளம் வந்து விடுமே. வருகிறேன்' என்று கூறிச் சென்றாள் நித்யா.

ஏதேனும் தேவை என்றால் அவள் என்னிடம் தயங்காமல் கேட்பாள். எதையும் திருப்பித் தர மாட்டாள். அப்படிச் செய்தால் என் மனம் புண்படும் என்பதை நுட்பமாக உணர்ந்திருந்தாள். திருப்பித் தராததன் மூலம் என்னை நெருக்கமானவனாக உணர வைத்துக் கௌரவப்படுத்தினாள்.

நித்யாவின் பணக்கஷ்டம் தீரவேண்டும் என்று ஆழ்ந்து விரும்பினேன். ஆனால் அவள் இருந்த சூழ்நிலையில் அவளுக்குத் திருமணம் நடக்குமென்று நான் நினைத்ததே இல்லை. அதனால் அவள் திருமண அழைப்பிதழ் தந்தபோது 'யாருக்குக் கல்யாணம்?' என்று கேட்டேன்.



அவள் முகம் லேசாக சிவந்தது. 'எனக்குத்தான்! பத்திரிக்கையை வாசித்துவிட்டு கேள்விகளை கேட்கக் கூடாதா?' என்றாள்.

அழைப்பிதழை வாசித்துவிட்டுத் திடுக்கிட்டேன்.

'என்ன இது! விவரமாகச் சொல்' என்றேன்.

'கல்லூரியில் என்னோடு படித்த ஒரு பெண் மிக வசதியானவள். அவளோடு பழக எல்லோரும் பயப்படுவார்கள்' என்றாள் நித்யா.

'ஏன்?' என்றேன்.

'மிக இனிமையானவள். ஆனால் அவள் அம்மாவைப் பற்றி ஏதேதோ வதந்திகள். எல்லோரும் அவளிடமிருந்து விலகியே இருந்தார்கள். நான் மட்டும் அவளோடு விரும்பிப் பழகினேன்' என்றாள் நித்யா.

'உனக்கு பயமில்லையா?' என்றேன்.

'நான் யாருக்கு, எதற்குப் பயப்படவேண்டும்? அவளும் என்னைப் போல பெண்தானே? மேலும் எவரையும் எந்தக் காரணத்திற்காகவும் தாழ்வாக என்னால் நினைக்க முடியாது' என்றாள் நித்யா.

'நான்கூட அப்படித்தான். விஞ்ஞானிகளையும், படிப்பாளிகளையும்கூட நான் தாழ்வாக நினைப்பதில்லை! மிகுந்த சிரமத்தின் பேரில் அவர்களையும் சமமானவர்களாகவே நினைக்கிறேன்' என்றேன்.

சிரித்தாள் நித்யா.

'அவளுக்கும் என்மீது மிகவும் பிரியம். அவளுக்கு இலக்கியத்தில் ஈடுபாடு. நானோ வேலைக்குப் போவதற்காகப் படித்தேன். அதனால் நாங்கள் படிப்புப் பற்றி பேசிக் கொண்டதே இல்லை!' என்றாள் நித்யா.

'நீ அவளுக்குப் பெரிய உதவி செய்திருக்கிறாய்!' என்றேன்.

'எந்தக் கேலிக்கும் நான் கவலைப்பட மாட்டேன் தெரியுமா? படிப்பு முடிந்தபின், அவளும், நானும் சந்திக்கவே இல்லை. போன மாதம்தான் எதிர்பாராமல் ஒரு சமையல் போட்டி நிகழ்ச்சியில் அவளைச் சந்தித்தேன். நான் வேடிக்கை பார்க்கப் போயிருந்தேன். அவள் போட்டியாளராக வந்திருந்தாள். அவளுக்கு எந்தப் போட்டியிலும் விருப்பமில்லை. ஆனால், சமையல் நிகழ்ச்சி என்பதாலும் ஏதாவது புதிதாகக் கற்றுக்

கொள்ளலாம் என்பதாலும் வந்திருந்தாள். அவள் சமையல் பிரமாதமாக இருந்தது. அவளுக்கு முதல் பரிசு கிடைத்து விட்டது. நானே ஜெயித்தது போல சந்தோஷமாக இருந்தது' என்றாள் நித்யா.

அடுத்தவர் வெற்றியை எத்தனை பேரால் தன் வெற்றியாக உணர முடியும்? நினைப்பது வேறு. உணர்வது வேறு.

'முதல் பரிசாக இருபதாயிரம் மதிப்புள்ள டிசைனர் சேலை கிடைத்தது. என்ன அழகு! வானவில்லில் நூலெடுத்து நெய்தது போலிருந்தது. தொட்டால் புதிதாகப் பிறந்த குழந்தையைத் தொடுவது போலிருந்தது. என் தோழியிடம் 'உனக்கு மிகவும் பொருத்தமாக, அழகாக இருக்கும்' என்றேன்.

அவளோ 'இதை நீதான் உடுத்த வேண்டும். இந்தச் சேலை உனக்குத்தான்' என்றாள். நான் திடுக்கிட்டுத் தயங்கினேன்' என்றாள் நித்யா. 'சந்தேகம் வரத்தானே செய்யும்? ஒரு பெண்ணால் சொத்துக்களைகூட விட்டுத்தர முடியும். சேலையையும், பாத்திரங்களையும் தந்துவிட முடியுமா?' என்றேன்.

'இதெல்லாம் பெண்களை மட்டம் தட்டுவதற்காக ஆண்கள் சொல்வது. எனக்கு அவள்மீது எந்தச் சந்தேகமுமில்லை. ஆனால், அதை வாங்கிக் கொள்ள என் அகந்தை தயங்கியது' என்றாள் நித்யா.

'அதை ஏன் அகந்தை என்கிறாய்? சுயமரியாதை என்று சொல்லலாமே?' என்றேன்.

'எங்கு, யாரிடம் சுயமரியாதையும், கௌரவமும் பார்க்க வேண்டும் என்ற பொதுபுத்தி, அறிவு வேண்டாமா? என் தயக்கம் அகந்தை என்று உடனே புரிந்து விட்டது. சேலையை வாங்கிக் கொண்டேன். அவளுக்குத்தான் எவ்வளவு சந்தோஷம்! அவளுக்கு வாயால் நன்றி என்று சொல்லவில்லை. ஆனால் என் நெஞ்சம் முழுவதும் அது மட்டும்தான் இருந்தது. வெளியே சொல்லவில்லை என்றாலும் எனக்கும் விதவிதமாக உடுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆசை இருந்தது. கடைகளுக்கு போகும்போது அங்கிருக்கும் பொம்மையாக மாறக் கூடாதா என்று தோன்றும். தினமும் விதவிதமான புதிய சேலைகளை கட்டிக் கொள்ள முடியுமே! நான் இதுவரை உடுத்தியது எல்லாமே என் அம்மா கட்டிய பழைய சேலைகள்தான்.



எனக்கென்று சொந்தமாக வந்த புதிய சேலை இதுதான். அதை ஒரு சேலையாகப் பார்க்கவில்லை. பாஞ்சாலிக்கு கண்ணன் தந்த சேலை வெள்ளமாகத்தான் பார்த்தேன். என் கண்ணன் தோழி உருவத்தில் வந்தான்' என்றாள் நித்யா. அவள் குரல் நெகிழ்ந்திருந்தது.

'அப்புறம்?' என்றேன்.

'வீட்டிற்குப் போனேன். அம்மாதான் சேலையை முதலில் நன்றாக விரித்துப் பார்த்தார். 'அழகாக இருக்கிறது' என்றார். அடுத்த நாள் நானும், அப்பாவும், அம்மாவும் கோவிலுக்குக் கிளம்பினோம். சந்தோஷமாக புதிய சேலையை உடுத்திக் கொண்டேன். அம்மா 'இதெல்லாம் நமக்கு வேண்டாம், திருப்பிக் கொடுத்து விடு' என்றார். 'பேசாமல் இரு' என்று அப்பா அதட்டியபின் அம்மா எதுவும் சொல்லவில்லை' என்றாள் நித்யா.

'கபாலீஸ்வரர் கோவிலா?' என்றேன்.

'நடக்கும் தூரத்தில் அதுதானே இருக்கிறது? கற்பகாம்பாளிடம் என் தோழி நன்றாக இருக்க வேண்டும் என்று மட்டும்தான் அன்று முழுவதும் வேண்டிக் கொண்டேன். தரிசனம் முடிந்து சுற்று மண்டபத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது ஒரு பெண் என்னருகே வந்து உட்கார்ந்து கொண்டார். என் சேலையை சற்று நேரம் உற்றுப் பார்த்துவிட்டு, 'இந்தச் சேலை நன்றாக இருக்கிறது. எங்கு வாங்கினாய்? என்றார், உடனே என் அம்மா ஏதோ ஒரு கடையின் பெயரைச் சொல்லி 'அங்கே வாங்கிய பல பட்டு சேலைகளில் இதுவும் ஒன்று' என்றார். 'சரி' என்று கூறி அப்பெண் போய்விட்டார். அம்மாவிற்குத் தெரியாமல் அவர் பின்னால் போனேன். என் தோழி போட்டியில் ஜெயித்ததையும், அவள் சேலையை எனக்குத் தந்ததையும் சொன்னேன். அந்தப் பெண் என்னை அணைத்துக் கொண்டார். 'இந்தச் சேலையை சமையல் போட்டிக்காக நாங்கள்தான் விசேஷமாக நெய்து உன் தோழிக்குப் பரிசாகத் தந்தோம். நானும் நேற்று போட்டி மண்டபத்தில் இருந்தேன்' என்றார். என்னைப் பற்றியும், என் குடும்பத்தைப் பற்றியும் விசாரித்தார். 'அட, நீங்களும் நம் ஆட்கள்தான்' என்று சந்தோஷப்பட்டவர் என் விலாசத்தை வாங்கிக் கொண்டு கிளம்பி விட்டார்' என்றாள் நித்யா.

‘அப்புறம்?’ என்றேன்.

‘இரண்டு வாரங்கள் கழித்து அவர் வீட்டு மனிதர்கள் அப்பாவைச் சந்தித்தார்கள். என்னைப் பெண் கேட்டார்கள். அவர்களது கடை பெயரை கேட்டதும் அப்பா அதிர்ந்துவிட்டார். ‘சென்னையில் எவ்வளவு பெரிய பட்டு சேலைக் கடை! எங்களுக்கு இது பேரதிர்ஷ்டம். உங்களுக்குச் சரி வருமா?’ என்று பல தடவை கேட்டுவிட்டார். நான் கோவிலில் சந்தித்த பெண்தான் மாப்பிள்ளையின் அம்மா. அவர் ‘எனக்கு பெண்தான் முக்கியம்’ என்று கூறிவிட்டார்’ என்றாள் நித்யா.

‘மாப்பிள்ளையை நேரில் பார்த்தீர்களா?’ என்று தயக்கத்துடன் கேட்டேன்.

அம்மாவிற்கு விஷயம் தெரிந்ததும் ‘இதில் ஏதோ சூதுவாது இருக்கிறது. என் பெண்ணின் வாழ்க்கையைக் கெடுக்க சம்மதிக்க மாட்டேன். மாப்பிள்ளைக்கு நோயோ, அல்லது வேறு என்னவோ பிரச்சனை இருக்கிறது’ என்று அழுதார். அப்பா சத்தம் போட்டபின் அடங்கினார். அதன்பின் அவர்கள் குடும்பத்தினர் முறைப்படி என்னைப் பெண் பார்க்க வந்தார்கள். அப்போது என்னோடு மாப்பிள்ளை கால்மணி நேரம் தனியாகப் பேசினார். எத்தனை நல்ல மனிதர்! மேல்நாட்டில் மேற்படிப்பு படித்தவர். அடக்கமானவர்.’ என்றாள் நித்யா.

‘காதல் வந்துவிட்டதாக்கும்?’ என்றேன்.

சிரித்தாள் நித்யா. ‘மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் கல்யாண நாள் நிச்சயம் செய்து விட்டுப் போன மூன்றாம் நாள் அம்மாவிற்கு நல்ல காய்ச்சல். ‘மாப்பிள்ளை வீட்டார் வந்து போனதும் உடல் நலம் கெட்டுவிட்டது. அவர்கள் சரியில்லை. அந்த சம்பந்தமே வேண்டாம்’ என்றார் அம்மா. ‘அவர்கள் உனக்கு ஏற்றவர்கள் இல்லை. ஆனால் நித்யாவிற்கு ஏற்றவர்கள். அதனால் நீ கல்யாண காரியங்களில் கலந்து கொள்ளாதே’ என்றார் அப்பா. ‘என்ன இப்படிச் சொல்லி விட்டீர்கள்!’ என்று அழுதார் அம்மா. ‘பெண் நல்ல கணவனோடு சேரவும், வாழவும் உதவுகிறவள்தான் உத்தமத் தாய். நல்ல கணவனோடு வாழவிடாமல் பெண்ணைப் பிரித்து வைத்திருக்கப் பார்ப்பவள் பொறாமைப் பேய்!’ என்றார் அப்பா. எனக்குக் கஷ்டமாக இருந்தது’ என்றாள் நித்யா.



‘பெண்ணாக இருந்தாலும், அம்மாவாக இருந்தாலும் இது போன்ற விஷயங்களில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்’ என்றேன்.

‘எப்படி இருந்தாலும் அவர் என் அம்மா அல்லவா? அன்று அப்பா அப்படி பேசியபின், அம்மா மாறிவிட்டார். தப்பாக எதுவும் பேசாமல் காரியங்களில் கலந்து கொள்கிறார்’ என்றாள் நித்யா.

‘உன் தோழிக்கு அழைப்பு தந்து விட்டாயா?’ என்று கேட்டேன்.

‘அவள் வெளியூர் சென்றிருப்பதாக அவள் அம்மா சொன்னார். ஆனால் விலாசம் தரவில்லை. சரியாக விவரம் எதுவும் சொல்லவில்லை. என்ன செய்வது? மனதிற்குள் அவளுக்கு முதல் பத்திரிக்கை தந்து விட்டேன். உனக்கு இரண்டாவது பத்திரிக்கை’ என்றாள் நித்யா.

குறைந்த சம்பளத்திற்கு நிறைய வேலை செய்த நித்யா வேலையை விடப் போகிறாள் என்பதில் ஆடிட்டருக்கு அதிர்ச்சி. ‘என்னம்மா இது! உன்னைப் போன்ற நல்ல ஆளை எங்கே போய் தேடுவது! உன் கணவரிடம் பேசிப் பார். சம்பளத்தை கூட்டித் தருகிறேன்’ என்றார்.

‘சார், மாப்பிள்ளையின் நிறுவனத்தில் நூறு பேருக்கு மேல் வேலை பார்க்கிறார்கள். இனி நித்யா நம்மிடம் வேலை பார்க்க வாய்ப்பில்லை’ என்றேன்.

‘அவள் சம்மதித்தாலும் நீ கெடுத்து விடுவாய் போலிருக்கிறது. நித்யா! நன்றாக இரு. நீ சிரமப்பட்ட காலத்தில் இந்த அலுவலகம்தான் ஆதரவு தந்தது. மறந்து விடாதே. உன் கணவரிடம் பேசி, உங்கள் நிறுவனத்தின் வருமானவரி கணக்கை இங்கே கொண்டுவர ஏற்பாடு செய். அது உன் கடமை. நீ செலுத்த வேண்டிய நன்றிக் கடன்’ என்றார் ஆடிட்டர்.

ஆடிட்டர் அப்பால் சென்றபின், ‘சந்துரு, நீ எப்போது உன் சொந்த அலுவலகத்தை ஆரம்பிக்கப் போகிறாய்?’ என்று என்னிடம் நித்யா கேட்டாள். நித்யா விடை பெற்று சென்றபின்தான் அவள் கேள்வியின் பொருள் வழக்கம் போல தாமதமாக எனக்குப் புரிந்தது, கூடவே அவள் வேதாளத்தின் கேள்விக்கும் பதில் தந்திருக்கிறாள் என்றும் தோன்றியது. அன்றாட விஷயங்களில் பொதுபுத்தியோடு நடந்து கொள்ள

வேண்டும். நீச்சல் தெரியாமல் வெள்ளத்தில் இறங்குவதும், துணை இல்லாமல் காட்டு வழியே போவதும் பொதுபுத்திக்குப் புறம்பானவை.

இறைவனே அனைத்துமாக மாறினான் என்று நம்பினால், அவனை எதிலும் அறிய முடியும். அனைத்துமாக இருந்து, அதற்கு அப்பாற்பட்டும் இருப்பவனை, ‘அவன் மறைமுக-மாகத்தான் வருவான்’ என்றோ அல்லது ’நேரில் வந்துதான் ஆக வேண்டும்’ என்றோ யாரால் உத்தரவிட முடியும்? நேரில் வருவதோ, மறைமுகமாக வருவதோ அல்லது வராமல் இருப்பதோ சர்வாதிகாரியான அவன் விருப்பமல்லவா? அவன் விருப்பம் எதுவோ அதைத் தன் விருப்பமாக ஏற்பதுதானே மனிதன் செய்ய வேண்டியது? அகந்தையை விட்டு தானே வந்ததை, பிரம்மம் தந்ததை வரவேற்றவளுக்கு, தோழி தேடி வந்த தெய்வம்தான். கடை பொம்மையாக நிற்க நினைத்தவள், கடை அதிபதியாக உட்காருவது அவள் தனக்குத்தானே உருவாக்கிக் கொண்ட அதிர்ஷ்டம்தான். பள்ளியில் தமிழாசிரியர் பொற்குன்றன் சொல்லித் தந்த ‘தீதும் நன்றும் பிறர் தர வாரா’ என்ற பாடம் இதுவரை பிழையாகிப் போனதே இல்லை.

அகந்தையில்லாமல் செயல்படுவது நீண்டகால யோக சாதனையின் சாரம். யோகத்தைப் பற்றி அறியாத நித்யா சாரத்தைத் தெரிந்து வைத்திருக்கிறாள்.

அன்று மாலை பூரணியிடம் நித்யா பற்றி சொன்னேன். ‘நேற்று நித்யா விடுப்பு எடுத்திருந்தாள். அதனால்தான் அவளை அறிமுகம் செய்து வைக்க முடியவில்லை’ என்றேன். புன்னகையோடு கேட்டுக் கொண்டாள் பூரணி. பதில் எதுவும் சொல்லவில்லை.

(தொடரும்)

*(இக்கதைப் பற்றிய கருத்துக்களை அனுப்ப அல்லது தொடர்பு கொள்ள* **mj@motherservice.org** *என்ற மின்னஞ்சல் முகவரியை பயன்படுத்தவும்)*

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Pappammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# கிராக்கி

ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க முடியாத சொற்கள் சில, **கிராக்கி, சும்மா, எச்சில், ராசி, ரஸம் தமிழ்ப் பண்புக்கே உரிய கருத்துகள்.** கிராக்கியைப் பற்றி இரு முக்கிய கருத்துகள் அன்பருக்கு உரியன.

1) கிராக்கி அல்பம். அது உள்ளவர் அன்னையை நெருங்கி வர முடியாது.

2) அன்னையை ஏற்கும் வரை நம்மைத் தொடரும் அன்னை ஏற்றவுடன் ஏற்ற அளவில் **செய்யும் கிராக்கி அளவற்றது.**

கண்ணப்பர் போல கண் கொடுத்த பின்னரும் அன்னை அசைய மாட்டார். **அசைவற்ற பிரம்மமாக அன்னை மாறி விடுவார்.** மனிதன் செய்யும் கிராக்கி தெரிந்து செய்வது. தெரியாமல் செய்யும் கிராக்கியைப் புரிந்து கொள்ள முடியாது. சுயநலமான ஒருவரை அவர் ஆபீஸில் 6 வருஷம் வாரம் ஒரு முறை சந்தித்தவர் ''**என்னை அவருக்குத் தெரியவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது**'' என்றார்.

சினிமா நடிகையுடன் வருபவர், பெரிய மனிதன் பக்கத்திலிருப்பவர், மனிதனுக்குச் சந்தோஷம் வந்தபொழுது எதிரிலிருப்பவர் கண்ணுக்குத் தெரியாது. **பார்ப்பது கண் அல்ல, மனம்.** கண்ணில் பட்டது மனதில் படாதது பார்வையற்ற நிலையில்லை, சுயநலம்.

**சுயநலத்திற்குக் கண்ணுண்டு.**

**அது உலகில் எங்கும் தன்னையே பார்க்கும்.**

மட்டமானவன் கிராக்கி செய்வான். மட்டமானவற்றிற்கும் கிராக்கி செய்வான். கிராக்கி செய்வதால் மட்டமானவனுக்குக் கிராக்கியின் பவர் தெரியும்.

**கிராக்கி எழுந்தால் கிராக்கி செய்யாமலிருக்க முடியாது.** கிராக்கி ஒருமுறை எழுந்தால் அது நம்மை ஆக்ரமித்துக் கொள்ளும். அதன் பிடியிலிருந்து தப்ப முடியாது. ஊசியின் காது வழி ஒட்டகம் போனாலும், பணக்காரன் கடவுளை அடைய முடியாது என பைபிள் கூறுகிறது.

**பணக்காரன் கடவுளை அடைந்தாலும் கிராக்கி எழுந்தபின் அன்னையை நினைக்க முடியாது.**

கிராக்கி தொடர்ந்து சுருங்குவது.

தொட்டவரெல்லாம் சுருங்கும்படி செய்வது கிராக்கி.

செய்ந்நன்றி கொன்றவரும் தப்பலாம், கிராக்கியுடையவர் தப்ப முடியாது.

விபச்சாரியும் பதிவிரதையாகலாம், கிராக்கியின் வெற்றியை மீற முடியாது.

ரிஷிகள், தீண்டாதவனை ரிஷியாக ஏற்கலாம், உயர்ந்த ஜாதிக்காரன் தாழ்ந்த ஜாதிக்காரனை ஏற்க மாட்டான்.

விதவையாகி தாழ்ந்த ஜாதிக்காரனுக்கு 3 பிள்ளைகள் பெற்றவள், அவன் தொட்ட சாப்பாட்டைச் சாப்பிட மாட்டாள் என்ற **செய்தி எனக்கு ஞானோதயம் தந்தது.**

**கிராக்கிக்கும் தெய்வாம்சமுண்டு. கிராக்கியும் திருவுருமாறும்.**

# வீடு - குடும்பம்

வீட்டைக் குடும்பம் என்ற கருத்தில் பேசும் சந்தர்ப்பங்கள் உண்டு. நட்பு, உறவு என்றவற்றில் உறவின் பந்தம் முடிவானது. நட்பின் நெகிழ்வே உறவு தராது. பழகுபவரெல்லாம் நண்பராக முடியாது. ஆபீஸில் பழகலாம். ஊரில் பொதுவாகப் பழகுவதால் வீட்டிற்கு அழைக்க முடியாது. வீட்டிற்கு அடிக்கடி வருவதால் மட்டும் சாப்பிட அழைக்க முடியாது. சாப்பாட்டிலும் கலந்து கொள்வதால் உறவில் உள்ளே வர முடியாது. **ஜாதி ஒன்றானாலும், அந்தஸ்து சமமானாலும், சம்பந்தம் செய்ய பண்பு ஒத்து வர வேண்டும்.** வேறு ஜாதியில் திருமணம் செய்தும் சந்தோஷமாக இருக்க வேண்டுமானால் பண்பு பக்குவமாக இருக்க வேண்டும்.

- கிராமத்து மக்களுக்கு நகரத்து வாழ்வு பிடிபடாது.
  தொந்தரவு தரும். அவரால் நகரத்து வாழ்வு பாதிக்கப்படும்.
- படிப்பு இல்லாததால் மனிதன் குறைய மாட்டான்.
  பண்பில்லாவிட்டால் உயர முடியாது.
- **மனம் வளரவில்லையெனில் அந்தஸ்தோ, படிப்போ, பணமோ, வயதோ அதைச் சரி கட்ட முடியாது.**
- வேணுகானம் கேட்பது பெரிய ஆத்மா.
  அதனால் வாழ்வில் அது திருமணம் நடக்கவும் உதவாது.
  ஆன்மா, மரபில் வாழ்விலிருந்து பிரிந்து நிற்பது.
- **அளவு கடந்த பிரியமும் அந்தஸ்தைக் கருதுபவரிடம் நெருக்கம் தராது.**
  எவ்வளவு நாள் பழகினாலும் தமிழ் தெரியாதவரிடம் தமிழ் பேச முடியாது.

**கிராமம், ஜாதி, படிப்பு, மன வளர்ச்சி, ஆத்ம விழிப்பு, அந்தஸ்தைக் கடந்து அன்பர்களை அந்நியோந்நியமாக இணைப்பது அன்னை சூழல்.** ''அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.''